
வானவில்

VAANAVIL

இதழ் 114 ஆனி 2020

ISSUE 114 JUNE 2020

# எதிர்வரும் பொதுத் தேர்தலில் சிறுபான்மை இன மக்களினதும் கட்சிகளினதும் பங்கு பணி என்ன?



இலங்கை நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் ஓகஸ்ற் 05, 2020 இல் நடைபெறவுள்ளது. பலத்த இழுபறிகளுக்குப் பின்னர் தேர்தல் ஆணையம் இத்திகதியை நிர்ணயித்துள்ளது. கொடிய கொரனோ நோயின் தாக்கமே இந்தத் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படாமைக்குக் காரணம் என வெளியுலகத்திற்கு கூறப்படுகிறது. ஆனால் 'வானவில்' பத்திரிகைக்கு அது மட்டும் காரணம் அல்ல எனத் தெரிய வருகிறது.

கடந்த வருடம் நொவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச அமோக வெற்றியீட்டி ஜனாதிபதியானார்.

மறுபக்கத்தில் ஐக்கிய தேசிய முன்னணி சார்பாகப் போட்டியிட்ட சஜித் பிரேமதாச, 2015 ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்த அதே தமிழ் – முஸ்லீம் கட்சிகளினது ஆதரவைப் பெற்றிருந்தும் கூட தோல்வியைத் தழுவிக் கொண்டார்.

அதன் மூலம் இலங்கையில் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் அரசியல் அமைப்பின் பிரகாரம் சிறுபான்மை இனங்களின் ஆதரவின்றி எவரும் ஆட்சிக்கு வர முடியாது என கூறிவந்தவர்களின் இறுமாப்புப் பேச்சு தவிடுபொடியாகிப்போனது.

உண்மை என்னவெனில் 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரியை பிரித்தெடுத்து அவரை வேட்பாளராக நிறுத்தியதின் மூலமே அவர்களால் வெற்றியீட்ட முடிந்தது. அதை விடுத்து சிறுபான்மை இனங்களின் ஆதரவால்தான் மைத்திரி வெற்றி பெற்றார் என்றால் 2019 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் சஜித் பிரேமதாச அல்லவா வெற்றி பெற்றிருக்க வேண்டும்?

ஆனால் ஈ.பி.டி.பி. தவிர்ந்த மற்றைய எல்லா தமிழ் – முஸ்லீம் கட்சிகளும் கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக ஒன்று திரண்டு நின்று படுமோசமான எதிர்ப் பிரச்சாரங்களை மேற்கொண்ட போதும் கோத்தபாய வெற்றி பெற்றார் என்றால், அது நிச்சயமாக சிங்கள மக்கள் வழங்கிய ஆதரவினால்தான். இதில் எந்த ஒளிவு மறைவும் இல்லை.

கோத்தபாயவின் வெற்றியும், அதற்கு முதல் 1970 பொதுத் தேர்தலில் சிறீமாவோ பண்டாரநாயக்க பெற்ற வெற்றியும், பின்னர் சந்திரிக குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச போன்றோர் பெற்ற வெற்றிகளும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களின் ஆதரவால்தான் பெற்ற வெற்றிகள் என்பதில் சந்தேகம் இல்லை.

2015 ஜனாதிபதித் தேர்தல் ஒரு விதிவிலக்காக அமைந்தமைக்குக் காரணம் அரசியல் சதி நடவடிக்கைகளே. அதாவது, அவர்கள் மைத்திரியை சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரித்தெடுத்ததின் மூலமும், மேற்கு நாடுகள் – இந்தியாவும் கூட – தமது சகல வளங்களையும் பயன்படுத்தி மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முயற்சி மேற்கொண்டதின் மூலமும், சகல தமிழ் – முஸ்லீம் பிற்போக்கு சக்திகளையும் ஓரணியில் திரட்டியதின் மூலமும், இடதுசாரிப் போர்வையில் இருக்கின்ற ஐந்தாம் படையான ஜே.வி.பியை தமது பக்கம் இழுத்ததின் மூலமும்தான் அந்த வெற்றி ஈட்டப்பட்டது.

எனவே உண்மையான மக்கள் அபிப்பிராயம் என்பது எப்பொழுதும்

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# இந்தியாவையும் சீனாவையும் யுத்தத்திற்குள் தள்ளும் சதி முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும்

அமெரிக்காவும் கனடாவும் 8993 கிமீ நீளமான உலகின் மிக நீண்ட எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன. 18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் இரு நாடுகளுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட பல ஒப்பந்தங்களின் மூலம் இரு நாடுகளும் சுமூகமாக தமது எல்லையை காலத்திற்காலம் நிர்ணயம் செய்து கொண்டன. இதனால் இரு நாட்டு மக்களும் எதுவித எல்லைப் பதற்றமுமின்றி நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்தியா ஏறத்தாள தனது 15,100 கிமீ நீளமான எல்லையை ஏழு நாடுகளுடன் (பங்களாதேஷ்,மியன்மார், சீனா, பூட்டான், நேபாளம், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்) பங்கிட்டுக் கொள்கின்றது. இதில் இந்தியாவிற்கு, சீனா (3488 கிமீ), பாகிஸ்தான் (3323 கிமீ) ஆகிய இரு நாடுகளுடனுனான எல்லைப்பிணக்கு நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். இதற்குக் காரணம் இந்தியா பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர், இன்னமும் பல இடங்களில் இரு நாட்டுக்குமிடையிலான எல்லைகள் சரியாக நிர்ணயிக்கப்படாததே. இதனால் இந்தியாவிற்கு சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

இந்தியா – சீனா இடையிலான உண்மையான கட்டுப்பாட்டு எல்லை (Line of Actual Control – LAC) வரையறுக்கப்படவில்லை. அதனால், கடல் மட்டத்திலிருந்து 4200 மீற்றர் உயரமான மிகவும் குளிரான நிலைகளில் இருநாட்டு இராணுவங்களும் முன்னேறுவதும், பின் வாங்குவதுமான சூழ்நிலையுள்ளது. இதனால் அவ்வப்போது பதற்றம் ஏற்படுகிறது. இறுதியாக 2013, 2017 களில் இந்திய – சீன எல்லையில் பதற்ற நிலைமைகள் தோன்றி மறைந்தன. மீண்டும் இவ்வருடம் மே மாதத்திலிருந்து கிழக்கு லடாக் (Ladakh) பிராந்தியத்தில் இரு நாட்டு இராணுவம் இடையே மோதல் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து, சுமார் 6 வாரங்களாக லடாக் எல்லையில் பதற்றம் நிலவி வருகின்றது. இந்நிலையில் ஜுன் 15ந் திகதி இரவு கல்வான் பள்ளத்தாக்கில் (Galwan Valley) இந்திய, சீன இராணுவத்தினர் மீண்டும் மோதிக் கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதில் இரு நாட்டு வீரர்களும் கற்களை வீசியும் நேரடிக் கைகலப்பிலும் ஈடுபட்டுக் கொண்டதாக கூறப்படுகின்றது. இந்த மோதலில், தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் உட்பட 20 இந்திய இராணுவத்தினர் பலியானதாக இந்தியத்தரப்பு தெரிவித்துள்ளது.. இந்திய இராணுவத்தினர் நடத்திய பதில் தாக்குதலில் சீன படைக்கு ஏற்பட்ட சேதங்கள் தெரியாது. 45 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா – சீனா இராணுவம் இடையேயான மோதலில் உயிர்ப்பலி ஏற்பட்டுள்ளதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பிரச்சனையை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க இரு நாடுகளுக்கு இடையே முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியர்கள் தமது காலனித்துவ நாடான இந்தியாவின் எல்லையை விஸ்தரிக்க எடுத்த முயற்சிகளின் தொடர்ச்சியாகத்தான், இந்தியாவுக்கும் பிற நாடுகளுக்கும் இடையில் எல்லைகளை உருவாக்கும் பணிகள் தொடங்கின. 1914இல் சிம்லாவில் (Shimla) நடந்த சந்திப்பில், திபெத்தின் ஆட்சி அதிகாரத்தை வரையறுக்கவும், இந்தியா – திபெத் – சீனா இடையிலான எல்லையைத் தீர்மானிக்கவும், பிரித்தானியா அரசு முயன்றது. இதில் முத்தரப்புப் பிரதிநிதிகள் கலந்துகொண்டாலும், அப்போது மெக்மொஹன் கோடு (McMahon Line) தொடர்பான ஒப்பந்தத்தில் பிரித்தானியாவும் திபெத்தும் மட்டுமே கையெழுத்திட்டன. அந்தக் கோடுதான் இந்தியா– சீனா இடையில் இமயமலைப் பகுதியில் நீண்டிருக்கும் எல்லை என்று பிரிட்டிஷ் இந்திய அரசு முடிவுசெய்தது. ஆனால் பின்னர், தான் கையெழுத்திடாத ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சீனா மறுத்துவிட்டது.

1949 ஆம் ஆண்டில் மாசே துங் தலைமையில் சீன மக்கள் குடியரசு ஆட்சி அமைந்த பின்னர், சீனா பலம் பெற ஆரம்பித்தது. 1947 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற இந்தியா, சீனாவுடனான எல்லைப் பிரச்சனையைத் தீர்ப்பதைக்காட்டிலும், ஆசியாவில் சீனாவை விடவும் பலம் பொருந்திய நாடாக திகழ வேண்டுமென்பதிலேயே முனைப்பாக இருந்தது.

மெக்மொஹன் கோட்டை 1914 முதல் சீனா அங்கீகரிக்கவில்லை என்ற போதிலும், 1949 வரை சீனாவின் எந்த அரசும், எல்லைப் பிரச்சினையைக் கையில் எடுக்கவில்லை. 1954 இல் இந்தியாவும் சீனாவும் செய்து கொண்ட பஞ்ச சீலக் கொள்கையின் அடிப்படையில் திபெத்தின் மீதான சீனாவின் முழுஉரிமையை (sovereignty) இந்தியா முதன்முதலில் அங்கீகரித்தது. இச்சந்தர்ப்பத்திலோ அல்லது இதன் பின்னரோ எல்லைப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு இருநாடுகளும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருக்கலாம்.

1959 ஆம் ஆண்டில், சீன அரசுக்கெதிராகத் திபெத்தில் நடந்த கிளர்ச்சியின்போது, திபெத்தின் 14வது தலாய் லாமா அடைக்கலம் கோரி இந்தியாவுக்கு வந்தார். அவர் இந்தியாவிலிருந்து கொண்டு சீனாவை விமர்சித்து அறிக்கைகளை வெளியிட்டார். இது சீனாவை சீற்றமுற வைத்தது. அதற்கு காரணம், 'ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் பிற நாடுகள் தலையிடக்கூடாது' என்ற பஞ்ச சீலக் கொள்கைகளில் ஒன்றினை இந்தியா மீறிவிட்டதாக, சீனா கருதியிருக்கலாம். இந்தியா தலாய் லாமாவை அரவணைத்தது என்பது தீர்க்கப்படாத எல்லைப் பிரச்சனையோடு, இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையிலான புதிய பிரச்சனையைத் தோற்றுவித்தது.

1962 ஆம் ஆண்டு ஒக்ரோபர் – நவம்பரில் நடந்த சீனா – இந்தியா யுத்தத்தின் பின்னணியில் தலாய் லாமா விவகாரமும் இருந்ததென்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஒருதலைப்பட்சமான இந்த யுத்தத்தில், இந்தியாவின் கிழக்கு எல்லைப்பகுதிகளில் சீன இராணுவத்தினர் முன்னேறி பல பகுதிகளை கைப்பற்றி வைத்திருந்து விட்டு, பழைய நிலைக்குத் திரும்பினர். இது இந்தியாவின் பகுதிகளை அத்துமீறிக் கைப்பற்றும் நோக்கம் சீனாவிற்கு துளியளவும் கிடையாது என்பதைக் கோடிட்டுக் காட்டிற்று.

இந்தியாவும் சீனாவும் பலமான அணு ஆயுதங்களைக் கொண்ட நாடுகள். அணு ஆயுதங்களை வைத்திருப்பது என்பதே நவீன காலத்தில் மறைமுகமான பெரும்போர் தவிர்ப்பு ஒப்பந்தம். இதனால் இரு நாடுகளுக்குமிடையே பெரிய யுத்தம் வராதென பலரும் அடித்துக் கூறுகின்றனர். இதில் கொஞ்சம் உண்மையில்லாமலில்லை. ஆனால் ஒரு தரப்பு இழைக்கும் ஏதோ ஒரு தவறின் மூலமாக யுத்தம் உருவாகலாம்.

சீனாவும் இந்தியாவும் முறையே 144 கோடி, 138 கோடி சனத்தொகையைக் கொண்ட நாடுகள். இதனால் இந்த இரு நாடுகளுக் இடையே மாத்திரம் பரஸ்பர வர்த்தக உறவுகள் மேம்படும் பட்டசத்தில், இன்னுமொரு அரை நூற்றாண்டில் பொருளாதார வளர்ச்சியில் மேற்கத்தைய நாடுகளைவிட மிஞ்சலாம். 2018 ஆம் ஆண்டில், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தகம் 95.54 பில்லியன் டொலர். இதில் இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு 18.84 பில்லியன் டொலர்கள் என்று இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் பல்வேறு தொழில் துறைகள் சீனாவைச் சார்ந்தே செயல்பட்டு வருகின்றன. இன்றைய உலகப் பொருளாதாரத்தில் இரு நாடுகளினதும் பங்களிப்பே முதன்மை வகிக்கின்றது. இவையெல்லாவற்றையும் கருத்திற்கொண்டு, ஏட்டிக்குப் போட்டியாக எல்லைகளில் படைகளைக் குவிக்காமல் பேச்சுவார்த்தைகள் மூலம், தொடர்ச்சியாக இரு நாடுகளும் உறவுகளைப் பலப்படுத்த வேண்டும்.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும்** வாசிக்கலாம்.

# சரிவுப் பாதையில் வடக்கு, கிழக்கு கல்வித் தரம்!

## கடந்த பதினைந்து வருட கால க.பொ.த (சா.த) பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்ற உண்மை!!

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியிருந்தன. பல கல்லூரிகளின் மாணவர்களின் சிறப்பான முடிவுகள் சமூகவெளியில் பாராட்டப்பட்டன.

ஆனால்கடந்த 15 வருட கால முடிவுகளை ஆராய்ந்த போது பல நுண்ணிய சரிவுகளை தெளிவாக அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு உள்ளிட்ட இலங்கையின் வடக்கு,கிழக்கு மாவட்டங்களின் அடைவு மட்டங்கள் நல்ல நிலையில் இருந்து படிப்படியாக சரிந்து பட்டியலின் கடைசி நிலைகளை அடைந்துள்ள நிலையில் அம்பாந்தோட்டை, மாத்தறை போன்ற சற்று பின்தங்கியிருந்த தென்பகுதிமாவட்டங்கள், பல காலமாக முதலிடத்தை அலங்கரித்த கொழும்பு மாவட்டத்தை 3ம் நிலைக்கு தள்ளி விட்டு முதல் இரு நிலைகளை அலங்கரித்திருப்பது பிரமிப்பு ஊட்டியது.


சில மாவட்டங்களில் கடந்த 15 வருடமாக இது எப்படி நடந்துள்ளது என்பதை 5 வருட இடைவெளியில் கீழே நாம் காணலாம்.

2005 இல் கொழும்பு–1ம்இடம், வவுனியா– 2ம் இடம், மாத்தறை– 9ம் இடம், யாழ்ப்பாணம்–10 ம்இடம், மட்டக்களப்பு–13ம் இடம், அம்பாந்தோட்டை– 15 ம்இடம், திருகோணமலை– 21, முல்லைதீவு– 24, கிளிநொச்சி– 25

2010இல் கொழும்பு– 1ம்இடம், வவுனியா – 7ம்இடம், மாத்தறை– 5ம்இடம், யாழ்ப்பாணம்–12 ம்இடம், அம்பாந்தோட்டை– 10 ம்இடம், மட்டக்களப்பு–15, திருகோணமலை– 22, முல்லைதீவு– 24,கிளிநொச்சி– 25

2015இல் கொழும்பு–1ம்இடம்,வவுனியா– 19ம்இடம், மாத்தறை– 2ம்இடம், யாழ்ப்பாணம்–21 ம் இடம், அம்பாந்தோட்டை–3ம்இடம், மட்டக்களப்பு–18, திருகோணமலை– 23, முல்லைதீவு– 24, கிளிநொச்சி– 25

2019 இல் கொழும்பு– 3ம்இடம், வவுனியா– 21ம் இடம்,மாத்தறை– 2ம்இடம், யாழ்ப்பாணம்–19 ம்இடம், அம்பாந்தோட்டை– 1ம் இடம், மட்டக்களப்பு–18, திருகோணமலை– 23, முல்லைதீவு– 24, கிளிநொச்சி– 25



இங்கே கல்வியில் தென்பகுதி மாவட்டங்கள் முன்னேறி விட்டன என்பது அல்ல பிரச்சினை. இலங்கையின் எல்லாப் பகுதிகளும் கல்வியில் முன்னேற வேண்டும் என்பதே அவசியம். அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களால் முடிந்த விடயங்கள் ஏன் வடபகுதி மாவட்டங்களால் முடியவில்லை என்பதுதான் சிந்தனைக்குரியதாகும்.

போர்க் கால சூழல் கடந்து எல்லோருக்கும் சமவாய்ப்புகள் இருக்கும் இன்றைய நிலையில் மூன்று வித நிலைகளே இங்கு காரணங்களாக இருக்க முடியும்.

1) தென்பகுதி மாணவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கும் போது வடக்கு, கிழக்கு மாணவர்கள் அப்படியே இருக்கின்றனர்.
2) வடக்கு, கிழக்கு மாணவர்களின் முன்னேற்றத்தை விட தென்பகுதி மாணவர்களின் முன்னேற்றம் அதிகமாக உள்ளது.
3) கற்றலில் வடக்கு, கிழக்கு மாணவர்களின் அடைவுகள் சரிந்து கொண்டிருக்கின்றன.

## திருநாவுக்கரசு தயந்தன்

இன்றைய உலக வழக்கில் க.பொ.த சாதாரண தர பெறுதிகளில் வாழ்க்கை தங்கியிருக்கவில்லை என்றும் ஏராளமான வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் பல தன்முனைப்பு அறிவுரைகள் முன்வைக்கப்படலாம். இந்தப் பெறுபேறுகளில் சாதித்தவன் மட்டும்தான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும் என்பதையும் நம்ப முடியாது.

ஆனால், இந்தப் பெறுபேறுகள் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாவட்டங்களுக்கானவை அல்லவே. இலங்கை முழுவதற்குமானவை.

இன்னமும் இலங்கையின் உயர்கல்வித் திட்டம் மற்றும் இடைநிலை/கடைநிலை அரச வேலைகளுக்கான தகுதிகள் இந்த கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுதிகளை வைத்தே அமைக்கப்பட்டுள்ளன என்பதுதான் உண்மை. அதை விட இலங்கையை பொறுத்த வரை பெருமளவான வேலைவாய்ப்புகள் அரச துறை சார்ந்தே அமைந்துள்ளன. தனியார்துறையின் பெரும்பாலான கடைநிலை வேலைகளிலும் இந்த சாதாரணதர அடைவு மட்டங்களே குறைந்த பட்ச தகுதிகளாகப் பார்க்கப்படுகின்றன.

ஆக, இந்த நிலை இன்னும் தொடருமாயின், நாளடைவில் அரச/தனியார் வேலைவாய்ப்புகளில் வடக்கு, கிழக்குப் பகுதியினரின் எண்ணிக்கைகள் சரிய, தென்பகுதியினர் படிப்படியாக அந்த இடைவெளிகளை நிரப்ப ஆரம்பிப்பார்கள். அது தவிர்க்க முடியாதது.

அதுமட்டுமல்ல, பணபலமுள்ள ஒருசிலர்/சுயமுயற்சியாளர்கள் என திறன் மிக்க சிலர் வாழ்க்கையில் முன்னேறினாலும் வேலைவாய்பின்றி பல வடக்கு, கிழக்கு இளைஞர்கள் பின்தங்கி நிற்பர். இவை இன்று கண்ணுக்குத் தெரியாது. ஆனால் எதிர்காலத்தில் தெரியும். ஆனால் அப்போது வடக்கு, கிழக்கு சமுதாயம் மேலும் பின்தங்கி நிற்கும்.

இந்த நிலைக்குக் காரணங்களாக பின்வருவன இருக்கக் கூடும்.

1) பெற்றோர்களின் கண்காணிப்புக் குறைபாடுகள்/ கண்டிப்பு குறைபாடுகள், குறைவானஅழுத்தம்.

2) கல்வி மீதான விருப்பு பொதுவாக குறைந்து பிற விடயங்கள் மீதான ஆர்வம். அளவுக்கு மீறிய வசதிகளும் இதில் அடங்கும்.
3) கல்விதான் அழியாத ஒரேஒரு சொத்து என்ற போர்க் காலத்தில் இருந்த நம்பிக்கை இன்று இல்லாமல் போனமை.
4) கல்வித் துறையில்இருக்கும் குறைபாடுகள்.
5) சக மாணவர்களையும் ஊக்கப்படுத்தி முன்னேற்றி விடுவதில் முன்னிலை மாணவர்களின் அக்கறை குறைந்தமை.

இவை தவிர போரின் வடுக்கள் உள்ளிட்ட இன்னும் ஏராளமான வேறு பல காரணிகளும் இருக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாக விபரித்து, விழிப்புணர்வை ஏற்படுத்தி அவற்றிக்கான தீர்வுகளை காண்பது அவசியம்.

ஏராளமான ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் மாணவர்கள் நல்ல பெறுபேறுகளை பெற வேண்டும் என்பதற்காக அன்றாடம் போராடுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆனால் இன்றைய நடைமுறைச் சட்டங்கள், பெற்றோரின் அழுத்தங்களால், பல ஆசிரியர்கள் கண்டிப்புடன் செயற்பட முடியாமை ஒரு காரணியாக இருக்கலாம்.

ஆனால் ஒவ்வொரு காரணியும் மிக முக்கியமானது. இந்த சரிவை இனியும் வடக்கு, கிழக்கு கல்விச் சமூகம் உணர்ந்து கொள்ளவில்லை என்றால் போர் காலத்தில் கூட கல்வித் துறையில் சாதனைகளுடன் திகழ்ந்த வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் வசதிகள் வந்ததால் அழிந்து போனதாகவே வரலாறு எழுதும். இந்தச் சரிவில் சமூகத்தில் உள்ள அத்தனை பேருக்கும் முக்கிய பங்கு உண்டு. ஒருவரை ஒருவர் குற்றம் சொல்ல முடியாது.

இனி என்ன செய்ய வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படி கட்டுப்பாடுகளுடன்/ பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை களகல்வியியலாளர்கள், பெற்றோர், மாணவர்கள் சிந்திக்க வேண்டும். அதுவே இன்றைய சமூகம் எதிர்கால சந்ததிக்கு ஆற்றுகின்ற பெரும் நன்மை ஆகும்.

# சோசலிசப் பெருமிதம்

**கோவிட்** 19 தொற்று பரவலின் வேகத்தை முற்றாக கட்டுப்படுத்தி கடந்த 50 நாட்களுக்கு மேலாக புதிதாக எவருக்கும் தொற்று இல்லை என்ற நிலையை எட்டி, இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது சோசலிச கியூபா. கடந்த ஜூன் 10 அன்றே, முந்தைய ஒரு மாத காலம் புதிதாக எந்த தொற்றும் இல்லை என்பது உறுதி செய் யப்பட்டு, கொரோனா பரவலின் முதல் கட்டத்திலிருந்து முற்றாக நாடு விடுபடுகிறது என்று ஜனாதிபதி தியாஸ் கேனல் (Díaz-Canel) அறிவித்திருந்தார். அதன் பின்னரும் புதிய தொற்று எதுவும் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.


Díaz-Canel

உலகம் முழுவதும் கொரோனா பரவல் வேகம் பல நாடுகளில் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், சத்தமில்லாமல், கியூபா தனது வலுவான மருத்துவ கட்டமைப்பின் உதவியோடும், கியூப உயிரி தொழில்நுட்ப மற்றும் மருந்துத்துறை தொழிற்சாலைகளின் அர்ப்பணிப்புமிக்க பணியின் காரணமாகவும் இந்த சாதனையை நிகழ்த்தி யுள்ளது. பரவல் மட்டுமல்ல, மரணங்களும் ஏதும் புதிதாக நிகழவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது. மேலும் ஹவானாவில் உள்ள மருத்துவமனைகள் மற்றும் நாட்டின் அனைத்து நகரங்களிலும், மாகாணங்களிலும் உள்ள மருத்துவமனைகளில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் எண்ணிக்கையும் கணிசமாக குறைந்துள்ளது.

ஏற்கெனவே கொரோனா பாதிப்பு சீனாவில் வேகமாக பரவிய சமயத்தில் அதை கட்டுப்படுத் துவதிலும், மரண வேகத்தை மட்டுப்படுத்துவதிலும் கியூப மருந்துகள் மிக முக்கியப் பங்காற்றின. இந்த பின்னணியிலேயே இத்தாலிக்கும் இன்னபிற நாடுகளுக்கும் கியூப மருத்துவக்குழுக்கள் கொரோனா தொற்றுக்கு எதிரான போரில் முக்கியத்துவம் வாய்ந்த பங்கினை ஆற்றி வருகின்றன. இந்நிலையில், கடந்த சில மாதங்களாக உலகம் முழுவதும் கொரோனா தொற்று பிரச்சனையில் கிடைத்துள்ள மருத்துவ அனுபவங்கள், உலகளாவிய மருத்துவவிஞ்ஞானிகளின் ஆழ்ந்த கருத்துக்கள் உள்பட அனைத்தையும் சீரிய முறையில் உள்வாங்கிக் கொண்டு தனது சிகிச்சை நடைமுறைகளையும், மருந்துகளின் தன்மைகளையும் மேலும் செறிவுள்ளதாக மாற்றியிருக்கிறது கியூபா.

சமீபத்திய சில பத்தாண்டுகளில் கியூபா, தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதில் மிகப் பெரிய அனுபவங்களை ஈட்டியுள்ளது. கியூபாவின், ஒருங்கிணைந்த மருத்துவ கட்டமைப்பானது தனது அர்ப்பணிப்புமிக்க மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருந்துத் துறையை கொண்டு 14 வகையான தொற்று நோய்களை நாட்டிலிருந்தே ஒழித்துக் கட்டியுள்ளது. ஒன்பது வகையான தொற்று நோய்களின் வீரியத்தை கட்டுப்படுத்தி, அவை பரவும் வேகத்தையும் குறைத்து, அவற்றுக்கான சிகிச்சை முறைகளை செறிவூட்டியுள்ளது.

இப்போது கொரோனாவை மட்டுப்படுத்துவது நடந்து கொண்டிருக்கிறது. இது மீண்டும் கியூபாவில் பரவாது என்று சொல்வதற்கில்லை. எனினும் பரவினால் அதை மீண்டும் உடனடியாக தடுத்து கட்டுப்படுத்துவதற்கான திறனும், வீரியம் இழக்கச் செய்வதற்கான பலமும் கியூபாவுக்கு இருக்கிறது என ஜனாதிபதி தியாஸ் கேனல் பெருமிதம் கொள்கிறார். சோசலிசப் பெருமிதம் அது.

**நன்றி: தீக்கதிர்**

# பெருந்தொற்றை வீழ்த்திய சீனாவின் சோசலிசம்!



உலகம் இதற்கு முன்பு பார்த்திருக்காத ஒரு புதிய கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவலை 2019 டிசம்பர் இறுதியில் சீனா முதன் முதலில் எதிர்கொண்டது. பிறகு அது உலகம் முழுவதும் பெருந்தொற்றாக பரவியது.

கொரோனா வைரசை முதன் முதலாக எதிர்கொண்ட நாடு என்ற வகையிலும், குறிப்பிடத்தக்க வெற்றியை சாதித்திருக்கும் நாடு என்ற வகையிலும் சீன அனுபவங்கள் தனித்துவமானவை. அடுத்தடுத்து புதிய கிருமிகளால் ஏற்படும் கொள்ளை நோய்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்ற அறிவியலாளர்களின் எச்சரிக்கையை மனதில் கொண்டால் சீனாவின் உடனடி செயல்பாட்டின் படிப்பினைகள் உலக மக்களுக்கு முக்கியமானவை என்பது புரியும். மேலும் இது சோசலிசத்தின் மேன்மையையும் உணர்த்துகிறது.

**சோசலிசமும் பொது சுகாதாரமும்:**

1918 ஆம் ஆண்டு ஸ்பானிஷ் ஃப்ளூ தொற்று நோய் பரவியது. முதல் உலகப்போரைத் தொடர்ந்து இந்த தொற்று கோடிக்கணக்கான உயிர்களை குடித்தது. அப்போதுதான் உருவாகியிருந்த சோசலிச சோவியத் குடியரசிலும் நோய் பாதிப்பு இருந்தது. வி.இ.லெனின் இதற்கென பொது சுகாதார அமைச்சகத்தை ஏற்படுத்தினார். மேலும் அவர் "உள்நாட்டு யுத்தத்தை எதிர்கொள்வதில் பெற்ற அனுபவம் அனைத்தையும் தொற்று நோய்களை எதிர்கொள்வதில் பயன்படுத்த வேண்டும்" என குறிப்பிட்டார்.

உலகில் முதன் முறையாக மையப்படுத்தப்பட்ட, பொது சுகாதார அமைப்பை ஏற்படுத்தியது சோவியத் ஒன்றியத்தில் அமைந்த சோசலிச அரசாங்கமே ஆகும். ஊரக பகுதிகளுக்கும் அது பின்னர் விரிவுபடுத்தப்பட்டது. இது அன்றைய காலத்தின் மிகப்பெரும் சாதனை என ஸ்பானிஷ் ஃப்ளூ பரவல் பற்றிய 'பேல் ரைடர்' (Pale Rider) என்ற புத்தகத்தில் லாரா ஸ்பின்னேய் (Laura Spinney) என்ற பத்திரிக்கையாளர் எழுதியுள்ளார்.

அனைத்திலும் முதன்மையானது மனிதர்களின் நலவாழ்வுதான் என்ற அணுகுமுறைதான் முதலாளித்துவ கட்டமைப்பில் இருந்து சோசலிசத்தை வேறுபடுத்துகிறது. கியூபா மருத்துவத்துறையில் ஆற்றியிருக்கும் மகத்தான சாதனைகளை நாம் அறிவோம். சீனாவின் கள சூழல் வேறுபட்ட ஒன்று. கொரோனா நோய் எதிர்ப்பில் அவர்களுடைய போராட்டத்தைக் குறித்து பார்ப்போம்.

**சீனாவில் பொது சுகாதாரம்:**

1949 இல் மாவோவின் தலைமையில் மக்கள்சீன புரட்சி அரசாங்கம் அமைந்தது. 1950 இல் நடைபெற்ற தேசிய சுகாதார மாநாட்டில் உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் இப்போதும் கவனிக்கத் தக்கவை.

1) விவசாயிகள், தொழிலாளர்களாகிய வெகுமக்கள் நலனுக்கு பணியாற்றுவதே சுகாதாரப் பணியாளர்களின் முதன்மையான கடமை.
2) நோய்களை முன் தடுப்பதுதான் முதன்மை இலக்கு.
3) நவீன மருத்துவத்தையும் பாரம்பரிய மருத்துவத்தையும் சமமாக வளர்த்தெடுக்க வேண்டும்.
4) மருத்துவ பணியாளர்களுடைய செயலூக்கம் மிக்க பங்களிப்புடன் மக்களுக்கு விழிப்புணர்வை கொண்டு சேர்ப்பது முக்கியமானது.

**இரா.சிந்தன்**

இப்போது சீனாவின் மக்கள் தொகை 140 கோடியாக உள்ளது. உலகின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமாக வளர்ந்துள்ளது. ஆனாலும் சீனா ஒரு வளரும் நாடுதான். எனவே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், ஊரகங்கள் மற்றும் நகரங்களுக்கான இடைவெளியும் அதிகமாக உள்ளன. சீனா தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதத்தை பொது சுகாதாரத்திற்காக செலவிடுகிறது. ஆயிரம் பேருக்கு 2 மருத்துவர்கள் உள்ளார்கள். 2.7 செவிலியர்கள் உள்ளனர். 4.34 படுக்கைகள் உள்ளன. இதிலிருந்தே சீனாவின் கட்டமைப்பு இன்னும் மேம்பட வேண்டியிருப்பதை அறிய முடியும்.

சமீபத்தில் புதிய சகாப்தத்தில் சீன சமூகத்தில் வெளிப்படும் முரண்பாடுகளை கம்யூனிஸ்ட் கட்சி ஆய்வு செய்தது. முக்கிய முரண்பாட்டை அடையாளமும் கண்டது. சீன மக்களிடையே பொருளாயத தேவைகள் அதிகரித்துள்ளன, உணவு, உறைவிடம் என்பதோடு கூடுதலான புதிய தேவைகள் உருவாகியுள்ளன, நலவாழ்வுக்கான விருப்பம் அதிகரித்துள்ளது. பண்பாட்டு வாழ்க்கையில் புதிய தேவைகள் உருவாகியுள்ளன. இவையெல்லாம் சமனற்ற, போதாக்குறையான வளர்ச்சியோடு முரண்படுகின்றன என்பது கம்யூனிஸ்ட் கட்சியின் கணிப்பாகும். இதனை மனதில் கொண்டுதான் சீன கம்யூனிஸ்ட் கட்சி செயல்படுகிறது.

**கொரோனா எதிர்ப்பு மக்கள் யுத்தம்:**

சீனாவின் ஊகான் நகரத்தில் நோய்த்தொற்று கண்டறியப்பட்ட ஒரு சில வாரங்களிலேயே பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு நோய் பரவியிருந்தது. அந்த நகரத்தில் மருத்துவமனை, மருத்துவர் மற்றும் மருந்து பொருட்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டது. இதே வேகத்தில் நோய் பரவினால் பொது சுகாதார கட்டமைப்பே பெரும் சுமைக்கு ஆளாகி, சமூக நெருக்கடியாகிவிடும்.

ஜனவரி 7 ஆம் தேதி சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமை நிலைக்குழு கூடியது. நோய்த்தொற்று நிலைமைகளை அது ஆய்வு செய்தது. உடனடியாகவும், அதிவிரைவாகவும் செயல்படுவதுதான்

அவர்களுக்கு இருந்த ஒரே வாய்ப்பு. அப்போதிருந்தே சீன கம்யூனிஸ்ட் கட்சி இதனை ஒரு மக்கள் யுத்தமாக வழிநடத்தியது.

“புரட்சிகர யுத்தம் என்பது மக்கள் நடத்துகின்ற ஒன்றாகும். மக்கள் சக்தியை திரட்டுவதன் மூலம் மட்டுமே நாம் அந்த போரினை நடத்த முடியும், மக்களை சார்ந்திருப்பதன் மூலமே அந்த போரை முன்னெடுக்க முடியும்” என்கிறார் தோழர் மாவோ. இந்த போராட்டம் நீண்ட ஒன்று, உத்திகளை மாற்றியமைத்து, உள்ளூர் நிலைமைகளை சரியாக கணக்கிட்டு மெல்ல மெல்ல முன்னேற வேண்டும். சீனாவில் வெற்றிபெற்ற சோசலிச புரட்சி அந்த கருத்தாக்கத்தின் நல்ல உதாரணமாகும்.

மக்கள் யுத்த கருத்தாக்கத்தை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் ஜி ஜின்பிங் வலியுறுத்திவந்த கருத்து. கொரோனா எதிர்ப்பு போராட்டத்தில் அந்த கருத்தாக்கம் பயன்பட்டது. மக்கள் நலவாழ்வே முதன்மையானது என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நாட்டின் அனைத்து வளங்களும் இந்த போராட்டத்திற்காக திருப்பிவிடப்பட்டன. சீன குடியரசுத்தலைவர் ஜி ஜின்பிங், ஒவ்வொரு கட்டத்திலும் இப்போராட்டத்தை வழிநடத்தினார். சீன பிரதமர் லி கெகியாங் கொரோனா எதிர்ப்பு குழுவிற்கு தலைமையேற்று ஒருங்கிணைத்தார்.

இந்த ‘யுத்தம்’ இரண்டு முனைகளில் முன்னெடுக்கப்பட்டது. முதலாவது மருத்துவமனைகள். அங்கு வரும் நோயாளிகளின் உயிரை காப்பாற்றுவது முக்கியம். இரண்டாவது நோய் பரவல் தடுப்பு நோயால் பாதிக்கப்பட்டோரை கண்டறிந்து தனிமைப்படுத்துதல். அதற்கு தேவையான வழிமுறைகளை வகுத்து விரைவாக செயல்படுவது.

ஜனவரி 23 ஆம் தேதி வூகான் நகரமும் ஹுபே மாகாணமும் உலகம் கண்டிராத மிகப்பெரும் ஊரடங்கினை தொடங்கியிருந்தன. நாட்டின் அனைத்து மாகாணங்களில் இருந்தும் மருத்துவர்கள், நவீன உபகரணங்கள் மற்றும் இதர வளங்களை திரட்டி அங்கே அனுப்பினார்கள். 330 மருத்துவக் குழுக்களும் 41600 மருத்துவ பணியாளர்களும் வூகானில் குவிக்கப்பட்டார்கள்.

தொற்றுநோய் தடுப்பு சிறப்புக் குழுவினர் 1800 பேர் வூகானிற்கு அனுப்பப்பட்டார்கள். ஐந்தைந்து பேர் ஒரு குழுவாக இணைந்து ஒவ்வொரு வீட்டிலும் நேரில் சென்று ஆய்வு செய்தார்கள். முதலில் வூகானிலும் அதை தொடர்ந்து சீனா முழுவதும் பின்பற்றப்பட்ட சில நடவடிக்கைகள் இங்கே குறிப்பிடத்தக்கன. தொற்றாளர்களின் தொடர்புகளை தடமறிய பழைய முறைகளுடன் சேர்த்து டிஜிட்டல் முறைகளும் பின்பற்றப்பட்டன. தொற்றாளர்கள் பயணித்த இடங்களுக்கு மற்றவர்கள் செல்லாமல் தவிர்க்கும் வகையில் எச்சரிக்கை பகிரப்பட்டது. 3 வார காலத்தில் 14 கோடி முறை இதற்காக இணையதள வசதி பயன்படுத்தப்பட்டதாகவும், அக்காலகட்டத்தில் 80 ஆயிரம் பேர் மட்டுமே பயணங்களை மேற்கொண்டதாகவும் அந்த நாட்டின் விபரங்கள் தெரிவிக்கின்றன. ஜெஜியாங் போல சில பகுதிகளில் சாலையில் சிக்னல் வைப்பது போல உடல்நிலையை பரிசீலித்து அடையாளம் காட்டும் சிக்னல்கள் அமைக்கப்பட்டன. சீனாதான் உலகிலேயே மிக அதிகமான இணைய பயன்பாட்டாளர்களை கொண்ட நாடு. அதன் காரணமாக அரசின் சுகாதார கண்காணிப்பு வசதிகளை இணையம் வழியாக சுமார் 90 கோடிப்பேர் பயன்படுத்த முடிந்துள்ளது.

மருத்துவக் கழிவுகளை கையாள்வதற்காக 13 மாகாணங்களில் இருந்து 140 சிறப்பு நிபுணர்கள் வந்தனர். ஒரு நாளைக்கு 1220 டன்கள் மருத்துவக் கழிவுகளை பாதுகாப்பாக கையாளும் வகையில் தகுதி படிப்படியாக உயர்த்தப்பட்டது.

ஷாங்காய் நகரத்திலிருந்து வூகானுக்கு சென்று செவிலியர் பயிற்சிக்காக தன்னை இணைத்துக் கொண்ட செவிலியர் ஹு நானா தனது கடிதத்தில் இவ்வாறு எழுதியிருந்தார். “எல்லோரும் நலமாக இருந்தால் மட்டுமே எங்களின் சிறு குடும்பமும் பாதுகாப்பாக இருக்க முடியும். பல குடும்பங்கள் தங்கள் குடும்பத்தோடு வாழவேண்டும் என்பதற்காக நான் எனது வீட்டை விட்டு வெளியே செல்லும் முடிவை எடுத்தேன். என்னுடைய தேசம் நடத்துகிற போராட்டத்தில் என்னுடைய பங்களிப்பு அவசியம். முன்னேறிய மருத்துவ தொழில்நுட்பங்கள் எங்களிடம் இருக்கின்றன. எனவே எனக்கு ஏதும் அச்சமில்லை. நான் கற்றுக்கொண்ட அனைத்தையும் என் திறமைகளையும் கொண்டு இந்த போராட்டத்திற்கு உதவி செய்வதென முடிவு செய்தேன்”

முதல் கட்ட போராட்டம் அடுத்தடுத்த நிலைகளை எட்டியது. ஜி ஜின்பிங் இவ்வாறு விவரிக்கிறார் “தொற்றுநோய் நாடுமுழுவதும் பரவுதலை கட்டுப்படுத்த ஒருமாதம் எடுத்தது, தினசரி கண்டறியப்படும் உள்நாட்டு தொற்று எண்ணிக்கை இரண்டாவது மாதத்தில்தான ஒற்றை இலக்கத்தை எட்டியது. வூகான் நகரம் அமைந்துள்ள ஹுபே மாகாணத்தில் போராட்டம் குறிப்பிடத்தக்க வெற்றியை சாதிக்க மூன்றாவது மாதம் ஆகியது”.

ஏப்ரல் 26 ஆம் தேதி வூகானில் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் தொற்றாளர்களின் எண்ணிக்கை பூஜ்ஜியம் ஆகியது. ஹுபே மாகாணத்தில் சிகிச்சை பெற்று நலமடைந்தவர்களில் 10 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் தீவிர சிகிச்சை பெற்று குணமடைந்தார்கள் என்பதையும், இதில் 3 ஆயிரத்து 600 பேர் 80 வயதுக்கும் அதிகமான முதியவர்கள் ஆவார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். இந்த போராட்டத்தில் வேதனை தரும் வகையில் மருத்துவப் பணியாளர்கள் 46 பேர் நோய் தொற்றுக்கு ஆளாகி உயிரிழந்தார்கள். முதல் முனையில் போராட்டத்தின் தீவிரம் குறைந்துள்ளது. இரண்டாவது முனை எப்போதும் விழிப்போடு இருக்க வேண்டியுள்ளது.

இந்தப் போராட்டம் முடிந்துவிடவில்லை என்பதை சீனா அறிந்தே வைத்திருக்கிறது. மேலும் தடுப்பு மருந்துகள் மற்றும் சிகிச்சை வழிமுறைகளில் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.

**நோயுடன் ஒரு சதுரங்கம்:**

தொற்றுநோய் தடுப்பு போராட்டத்தை விவரிக்கும்போது அதனை ஒரு சதுரங்க விளையாட்டாக ஒப்பிட்டார் ஜி ஜின்பிங். சீன தேசமே அந்த சதுரங்கத்தை ஆடியது. மருத்துவப் பணியாளர்களும், அறிவியல் அறிஞர்களும் ஒரு அணியாக நின்றார்கள் எனில், அந்த நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியும், சோசலிச அரசாங்கமும், அரசு நிறுவனங்களும் பின்பலமாக நின்றார்கள். 90களுக்கு பிறகு பிறந்த இளைஞர்களின் பங்களிப்பு இதில் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

**அனைவருக்கும் இலவச சிகிச்சை:**

வூகான் நகரத்தில் ஊரடங்கு அறிவிப்பதற்கு ஒரு நாள் முன்பாகவே, பணம் இல்லாத காரணத்தால் குடிமக்களின் ஒருவருக்கும் கூட கொரோனா பரிசோதனையோ அல்லது சிகிச்சையோ மறுக்கப்படக் கூடாது என்பதை அரசு தெளிவுபடுத்தியது.

சீன மருத்துவ காப்பீட்டு ஆணையத்தின் கணக்கீட்டின் படி கொரோனா தொற்று கண்டறியப்பட்ட உள்நோயாளிகளுக்கான செலவு தலா 2லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆகும். தீவிர சிகிச்சை தேவைப்பட்டவர்களுக்கான செலவு 15 லட்சத்தை தாண்டியது. 70 வயதாகிய கொரோனா நோயாளி ஒருவருக்கு 3 மாதங்கள் சிகிச்சை தொடர்ந்து

தரப்பட்டது, அவருக்கு எக்மோ கருவி இரு முறை பயன்படுத்தப்பட்டது. இதன் காரணமாக அவரை குணப்படுத்துவதற்கான செலவு சுமார் 1 கோடியே 40 லட்சமாக ஆகியது.

இந்த செலவுகளில் ஒரு பகுதி இன்சூரன்ஸ் மூலமாகவும், பெரும்பகுதி அரசு நிதியாகவும் ஈடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இக்காலத்தில் செயல்பட்ட அத்தியாவசிய நிறுவனங்களில் பணியாளர்களுடைய பாதுகாப்பை அரசே உறுதி செய்தது. தனியார் நிறுவனங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கான நிதி உதவியை அரசு மேற்கொண்டது.

**அதிவிரைவான அறிவியல் ஆய்வுகள்:**

தொற்று நோய் தடுப்புக்காக அமைக்கப்பட்ட்ட குழுக்களின் அதி முக்கியத்துவம் வாய்ந்தது பல துறை அறிவியல் அறிஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்ட குழுவாகும். உலகம் பல தொற்றுநோய்களை எதிர்கொண்டிருக்கிறது காலரா, பிளேக், சின்னம்மை மற்றும் தொழுநோய் ஆகியவை பரவுவதை அறிந்து கொள்ளவும், தடுப்பதற்கும் நீண்டகால ஆராய்ச்சிகள் தேவைப்பட்டன. சமீபத்தில் நாம் எதிர்கொண்ட பெருந்தொற்றாகிய ஹெச் 1 என் 1 வைரசை அறிவதற்கு ஒருமாத கால ஆய்வு தேவைப்பட்டது. கொரோனா வைரசின் ஜீன் சீக்குவன்ஸ் ஒரு வார காலத்தில் தனிமைப்படுத்தப்பட்டதும், அது உலக நாடுகளோடு பகிரப்பட்டதும் மருத்துவத் துறைக்கு பெரும் உதவியாக அமைந்தது.

வைரசின் பாதிப்புகள் அது பரவும் விதம் குறித்து அறிந்து தொற்றுநோய் தடுப்பு உத்திகள் வகுக்கப்பட்டன. சிகிச்சை முறை உருவாக்கப்பட்டது. பலன் கொடுக்கும் மருந்துகள் உலகின் பல நாடுகளில் இருந்தும் பெறப்பட்டன. 16 நாட்களில் டெஸ்டிங் கிட்டுகள் உருவாக்கப்பட்டது, அவைகளை போதுமான எண்ணிக்கையில் தயாரித்து அனுப்பும் பணி தொடங்கியது.

அறிவியல் நிபுணர்களுக்கு வேறு ஒரு வேலையும் இருந்தது. அவர்கள் சீன மக்களிடையே தொலைக்காட்சிகளில் உரையாற்றினார்கள். தொலைபேசி வழி கேள்விகளுக்கு பதில் சொன்னார்கள். இவ்வாறு வதந்திகளுக்கு எதிரான அறிவியல் பிரச்சாரமும் முக்கிய பங்கு வகித்தது.

**அரசு நிறுவனங்களின் பங்களிப்பு:**

சீனாவின் தனியார் தொழில்நுட்ப நிறுவனங்கள் கொரோனா எதிர்ப்பு போராட்டத்தில் செய்த பங்களிப்பு




அப்போதே பல செய்திகளில் வெளிவந்தது. அலிபாபா, டென்செண்ட், பைடு, சென்ஸ் டைம் ஆகிய நிறுவனங்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை வழங்கின. இணையதள நேரலை சேவைகளின் மூலம் பள்ளி வகுப்புகள் தொடரப்பட்டன. மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது. தொற்றாளர்கள் மற்றும் நோய் பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகளில் உணவு விநியோகத்திற்காக ரோபோட்டுகளை பயன்படுத்தினார்கள். ஆனால் அரசு நிறுவனங்களுடைய மாபெரும் பங்களிப்பு இல்லாமல் கொரோனா போராட்டத்தை அவர்கள் நடத்தியிருக்க முடியாது.

சீன அரசு நிறுவனங்களின் பங்களிப்பு குறித்து கூடுதலாக குறிப்பிட வேண்டும். சாளரம் அமைப்பதற்கு 10 நொடிகள், சுவர் எழுப்ப 2நிமிடங்கள் என அதிவேகமாக, இரவும் பகலும் உழைத்து மருத்துவமனைகளை கட்டியது சீன அரசுக்கு சொந்தமான கட்டுமான நிறுவனங்களே ஆகும். 4000 ஆயிரம் கட்டுமான தொழிலாளர்கள் இரவு பகலாக உழைத்தார்கள். இந்த கட்டுமான பணிகளுக்கு தேவையான மின்சாரம், எரிசக்தி மற்றும் தகவல் தொடர்பினை அரசு நிறுவனங்களே வழங்கின.

மருத்துவ உபகரண உற்பத்தியை அரசு நிறுவனங்களின் விரைவான உதவியின் காரணமாகவே உடனடியாக அதிகரிக்க முடிந்தது.தொற்றுநோய் தடுப்பு உபகரணங்களான கவச உடைகள் முதல் அனைத்து உபகரணங்களின் உற்பத்தியும் விரைவாக அதிகரிக்கப்பட்டது. எரிசக்தி, தானிய உற்பத்தி, எண்ணெய், உணவுப்பொருட்கள் மற்றும் மருந்து உற்பத்தியில் அரசு நிறுவனங்கள் பெரும் பங்களிப்பை செய்தன. சந்தையில் அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுக்குள் வைக்கப்பட்டது. விலையை உயர்த்தி விற்ற வணிகர்கள் மீது குற்றவழக்கு பதியப்பட்டது, செயற்கை விலையேற்றம் கட்டுப்படுத்தப்பட்டது.

சீன அரசின் எண்ணெய் மற்றும் உணவுப்பொருள் கழகம், சீன தானிய சேமிப்புக் குழுமம், சீன உப்பு தொழிற்சாலை அனைத்தும் தங்கள் வழங்கலை அதிகப்படுத்தின. சீனாவின் வழங்கல் மற்றும் சந்தைப்படுத்துதல் கூட்டுறவு நிறுவனங்கள் முயற்சியெடுத்து விவசாய கூட்டுறவு சங்கங்களை நேரடியாக தொடர்பு கொண்டு காய் கனிகள் மற்றும் தேவையான பொருட்கள் சரியான விலையில் தடையில்லாமல் கிடைப்பதை உறுதி செய்தன.

மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு, அதிலும் குறிப்பாக மருத்துவர்களுக்கான பாதுகாப்பு கவச கருவிகள் தயாரிக்கும் பணி புயல் வேகத்தில் முடுக்கிவிடப்பட்டது. ஜனவரி 28 ஆம் தேதி அன்று சீனாவில் ஒரு நாளில் 10 ஆயிரம் சோடி கருவிகளை தயாரிக்க முடிந்தது. பிப்ரவரி 24 ஆம் தேதி அவர்களின் தயாரிப்பு வேகம் ஒரு நாளைக்கு 2 லட்சத்தை தாண்டியது. பிப்ரவரி 1 ஆம் தேதி என்ற அளவில் 7 லட்சத்து 73 ஆயிரம் பரிசோதனைக் கருவிகளை சீன அரசு தயாரித்தது பிப்ரவரி 25 ஆம் தேதியன்று ஒரு நாளில் 17 லட்சம் என்ற அளவில் அதன் எண்ணிக்கை உயர்ந்தது. மார்ச் 31 ஆம் தேதி இந்த எண்ணிக்கை 42 லட்சமாகியது. தொழிற்சாலை நிர்வாகங்களை மருத்துவ உபகரண தயாரிப்பை நோக்கி உந்தித் தள்ளியது அரசு நிர்வாகம். ஆம்புலன்சு வாகனங்கள், வெண்டிலேட்டர்கள், இ.சி.ஜி இயந்திரங்கள், கிருமி நாசினி இயந்திரங்கள் உள்ளிட்டு தேவையான அனைத்து கருவிகளும் உள்நாட்டிலேயே அதிக எண்ணிக்கையில் உற்பத்தி செய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**முன்னணிப் படையாக கம்யூனிஸ்டுகள்:**

மார்க்சியவாதிகள் என்போர் ஆரூடம் சொல்பவர்கள் அல்ல. எதிர்கால வளர்ச்சிப் போக்குகளையும் மாற்றங்களையும் மனதில் கொண்ட பொதுவான வழி காட்டுதல்களையே அவர்களால் உருவாக்க முடியும், இயந்திர கதியாக ஒரு காலத்தை நிர்ணயிக்க முடியாது என்றார் மாவோ. சீனாவின் 46 லட்சம் கட்சி கிளைகளும் இப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள். போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் இயக்கவியல் பார்வையோடு வழிநடத்தினார்கள்.

மக்களிடமிருந்து மக்களுக்கு என்ற மாஸ்லைனை நீண்ட காலமாக கடைப்பிடிக்கும் அனுபவம் கொண்டது சீன கம்யூனிஸ்ட் கட்சி. கட்சியின் அனைத்து நிலைகளிலும் உள்ள கமிட்டிகள் உடனடியாக ஒரு அவசர நிலையை எதிர்கொள்ள தயாரானார்கள். தங்களிடமுள்ள அனைத்து வளங்களையும் திரட்டினார்கள். மக்களுக்கு தலைமையேற்க வேண்டும், மக்களிடம் இருந்து ஆலோசனைகளை பெற்று

செயல்பாடுகளை பட்டை தீட்ட வேண்டும்.

யாரும் செய்வதற்கு தயங்கும் ஒரு பணியாக இருந்தால் அதில் கம்யூனிஸ்டுகளே முதல் ஆளாக ஈடுபட வேண்டும். தயக்கம் என்பது ஒருபோதும் கூடாது என்றது கட்சி.

1) முன் கை எடு,
2) அறிவியல் அடிப்படையில் நோயின் தன்மையை அறிந்து கொண்டு செயல்படு
3) திட்டமிடுதலை மிகுந்த கவனத்துடன் மேற்கொள்க, ஒட்டுமொத்த திட்டத்தின் பகுதியாகவும், உள்ளூர் நிலைமைகளை மனதில் கொண்டும் திட்டம் இருக்க வேண்டும்,
4) திட்டமிட்ட பணிகளை அமைப்பின் வலிமையைக் கொண்டு செயலாக்குக. நடைமுறை அனுபவங்களை உள்வாங்கி செயல்பாட்டினை கூர்மைப்படுத்துக என வழிகாட்டியது.

ஜி ஜின்பிங், “பொத்தாம் பொதுவான உத்தரவுகளைக் கொண்டோ, அதிகாரத்துவத்தைக் கொண்டோ அல்லது பெயருக்கு வேலை செய்வதாலோஇந்த சவாலை எதிர்கொள்ள முடியாது.” என தெளிவாகவே குறிப்பிட்டார். உத்தரவுகளை கேட்டு வேலை செய்யும் பணியாளராக அல்ல, உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப உத்திகளை வகுத்து செயல்படும் தளபதியாக செயல்பட்டார்கள் முரண்பாடுகளை ஆய்வு செய்து முறையாக கையாண்டார்கள்.

மருத்துவர், செவிலியர் என மருத்துவ சிகிச்சை முனையில் பணியாற்றிய குழுக்களில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் முன் நின்றார்கள். உதாரணமாக ஹுபே மாகாணத்திற்கு வந்த சீன ராணுவ மருத்துவக் குழுவினர் 450 பேரிலும் 60 சதவீதம் கட்சி உறுப்பினர்கள் ஆவார்கள்.

பீக்கிங் பல்கலைகழகத்திலிருந்து மட்டும் வூகானுக்கு 405 மருத்துவ பணியாளர்கள் வந்திருந்தனர். அதில் 171 பேர் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள். “ஒவ்வொரு பத்து நிமிடத்திலும் 5 நோயாளிகளை பரிசோதிக்க வேண்டியிருந்தது” வாங் பென் என்ற மருத்துவர் இவ்வாறு குறிப்பிட்டார் “வூகானில் ஒவ்வொரு நாளும் மக்கள் எங்களை அன்பில் நனைத்தார்கள், கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்ததற்கான பொருளை இந்த போராட்டம் எங்களுக்கு உணர்த்தியது”.

ஹெய்லாங்ஜியாங் உள்ளிட்ட சில இடங்களில் கட்சியினரும், அரசு அதிகாரிகளும் தளர்வோடு நடந்து கொண்டார்கள். உடனடியாக தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை மேற்கொண்டு கட்டுப்பாட்டை கூடுதலாக்கினார்கள். மேலும் களத்தில் ஒவ்வொரு வீடாக சென்று உதவி செய்த கட்சி தோழர்களின் பணியை ஒழுக்க ஆய்வு மற்றும் மேற்பார்வை குழு கண்காணித்தது. இந்தக் குழுவுக்கென தனியாக ஒரு பத்திரிக்கை இயங்குகிறது நோய் தடுப்புக் குழுக்களின் அர்ப்பணிப்பு மிக்க பணிகள் ஏராளமாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

**சமுதாய குழுக்களின் பங்களிப்பு:**

மாகாண அரசுகளும், உள்ளாட்சிகளும் அவரவர் சூழல் குறித்து ஆய்வு செய்து படைப்பாக்கத்துடன் செயல்பட்டார்கள். மக்களுடன் நேரடி தொடர்பை உறுதி செய்யும் 6 லட்சத்து 50 ஆயிரம் சமுதாய குழுக்கள் சீனா முழுவதும் உள்ளன. இவையே சீன அதிகாரப்பரவல் கட்டமைப்பின் கடைசி கண்ணிகள். நகரங்களிலும், கிராமங்களிலும் உள்ள இந்தக் குழுக்களின் 40 லட்சத்திற்கும் அதிகமான உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் கொரோனா விழிப்புணர்வு பணிகளில் ஈடுபட்டார்கள். ஒவ்வொரு சமுதாய குழு உறுப்பினரும் 350 பேரை நேரில் சந்திக்க வேண்டியிருந்தது. ஊரடங்கு தீவிரமாக அமலாக்கப்பட்ட ஹுபே மாகாணத்தில் 1 லட்சத்து 70 ஆயிரம் பேர் உணவுப்பொருள் மற்றும் மருந்து விநியோகத்தில் பணியாற்றினார்கள். அதாவது ஊரடங்கு காலத்தில் மக்கள் நடமாட்டத்தை குறைப்பதற்கான பணியில் இவர்களின் உழைப்பு மிகப்பெரும் பங்கு வகித்தது.

கரடுமுரடான சாலைகளில், பாதுகாப்பில்லாத பகுதிகளில் பயணித்து ஒவ்வொரு குடிமகனையும் அவர்கள் சந்தித்தார்கள். குடிமக்கள் நல அமைச்சகத்தின் தகவலின்படி இந்த பணியாளர்களில் 53 பேர் பணியின்போது மரணமடைந்துள்ளனர். இவ்வாறு மரணமடைந்தவர்களில் 92.5 சதவீதம் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆவார்கள்.

சீனாவின் ஹெனான் மாகாணத்தில் போய் என்ற மாவட்டத்தில் நடந்தவைகளை சென் சென் என்பவர் பீப்பிள்ஸ் டெய்லி இதழில் எழுதியுள்ளார்.

மாகாணத்தின் திறன் வாய்ந்த தோழர்களை தேர்வு செய்து முன்னணிக்கு அனுப்பினார்கள். மொத்தம் 523 பேர். அவர்களின் பணி ஆளுக்கு ஒரு குழுவை வழி நடத்துவதாகும்.

இந்த குழுக்களின் கட்சி உறுப்பினர்கள் சிறப்பாக செயல்பட்டால் அவர்கள் சிவப்பு பட்டியலில் இடம் பெற்றார்கள். தொய்வாக இருந்தால் நீல பட்டியலில் இடம்பெற்றார்கள். போய் மாவட்டத்தில் 76 பேர் சிவப்பு பட்டியலிலும், 2 பேர் நீல பட்டியலிலும் இடம் பிடித்தார்கள். முன்னணியில் பணியாற்றும் குழுக்களுக்கு சரியான நேரத்தில் உணவு, குடிநீர் கொடுப்பது. ஆட்களை மாற்றிவிடுவது. முக கவசம், கை உறைகள் கிடைக்கச் செய்வது தனியாக ஒரு குழுவால் கவனிக்கப்பட்டது. இந்த பணியாளர்களுக்கு ஆன்லைன் வழி உளவியல் ஆலோசனைகளும் உறுதி செய்யப்பட்டன. இந்த போராட்டத்தின் வழியே ஏராளமான புதிய உறுப்பினர்கள் கட்சியை நோக்கி ஈர்க்கப்பட்டனர்.

**இளைஞர்களின் பெரும் பங்கேற்பு:**

கொரோனா நோய் தடுப்பு பணிகளில் இளைஞர்களை அதிக அளவில் ஈடுபடத் தூண்டியது சீன அரசும், கம்யூனிஸ்ட் கட்சியும். 1990 களுக்கு பின் பிறந்த இளைஞர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்றார்கள். ஆண் செவிலியரான ஜியான் யாங், “நாங்கள் இளைஞர்கள், நாங்களே முன் வரிசையில் நிற்போம்” என உற்சாகமாக குறிப்பிடுகிறார். இளைஞர்களின் பங்கு தனித்து குறிப்பிட வேண்டிய அளவில் தனிச்சிறப்பானதாக இருந்தது.

இப்போது சீன ஊடகங்களில் 90களுக்கு பின் பிறந்தோர் என்பதே அவர்களை குறிப்பிட பொதுவான பெயராகிப்போனது. வூகானில் குவிக்கப்பட்ட மருத்துவப் படையணியில் 12 ஆயிரம் பேர் 90களுக்கு பின் பிறந்தவர்கள் ஆவர்.

ஒரு வேளை இந்த போராட்டத்தில் நான் மரணிக்க நேர்ந்தால் வைரஸ் குறித்த ஆராய்ச்சிக்காக என்னுடைய உடல் பயன்படும் என லி ஹு என்ற பெண் செவிலியர் தெரிவித்தார். அவர் 1995க்கு பின் பிறந்தவர்.

95 க்கு பின் பிறந்த காவல் அதிகாரியான யாங் குயுச்செங். தனது அனுபவத்தை பகிர்ந்திருக்கிறார். பல நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்து வரச் செல்லும்போது நாய்களை எதிர்கொள்வது சவாலாக இருந்தது. சில காவலர்கள் நாய் கடிக்கு ஆளானார்கள். நோயாளிகளுக்கு ஏற்படும் அச்சத்தை போக்குவதுடன் அவர்களுடன் நிதானமாக உரையாடியே மருத்துவமனைகளுக்கு அழைத்துவர வேண்டும் என்கிறார் அவர். இந்தப் போராட்டத்தின் போக்கில் அவர் கம்யூனிஸ்ட் கட்சியிலும் தன்னை இணைத்துக் கொண்டார்.

வாகனங்களை பரிசோதிக்கும் பணியில் ஈட்டுபட்டட்டவர் சோவ் போஜியான். “தியாஞ்சின் பகுதியை கடந்த ஒவ்வொரு ஓட்டுனரையும் பரிசோதித்தேன்.

அவருடைய உடல்நலனை விசாரித்து பதிவு செய்தேன். கைகள் குளிரில் உறைந்தன. எனினும் ஒருவரைக் கூட விசாரிக்காமல் விடவில்லை.” என்கிறார் அவர்.

கூட்டுறவு மற்றும் பகிர்மான அலுவலகத்தின் பணியாளரான லியூ போ, 40 நாட்கள் முன்னணி பணிகளை மேற்கொண்டார். தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு தேவையான உபகரணங்களை வாங்கி வழங்குவது அவருடைய பணி. 10 விதமான பொருட்களை தினமும் 550 செட்டுகள் வாங்கி அவற்றை தனிமைப்படுத்தல் அறைகளில் வைக்க வேண்டும். 40 நாட்கள் இடைவெளியில்லாமல் செய்து முடித்துள்ளார் அந்த இளைஞர்.

இவ்வாறு கொரோனா நோய் தடுப்பில் குறிப்பிடத்தக்க வெற்றியை சீனா சாதித்திருக்கிறது. ஒருங்கிணைந்த விரைவான செயல்பாடுகளே அவர்களை காத்துள்ளன.

கொரோனா நோய்த் தொற்றிலிருந்து சொந்த மக்களை பாதுகாப்பதில் அரசாங்கங்கள், பெரு நிறுவனங்கள், உள்ளூர் சமூகம் மற்றும் ஊடகங்களுடைய செயல்பாடுகளை பற்றிய ஆய்வினை சிங்கப்பூரின் இரண்டு முன்னணி ஆய்வு நிறுவனங்கள் நடத்தினார்கள். (Singapore’s leading social research agency Blackbox Research and technology company Toluna) 23 நாடுகளிலிருந்து பொதுமக்கள் பங்கேற்ற இந்த ஆய்வில் முதல் இடத்தினை சீனமும், இரண்டாம் இடத்தை வியட்நாமும் பிடித்திருந்தன. ஏகாதிபத்திய நாடுகள் இந்த பட்டியலில் 50 புள்ளிகளைக் கூட பெற முடியாமல் பின் தங்கியிருக்கிறார்கள்.

**சில படிப்பினைகள்:**

அவசரகாலத்தில் முடிவுகளை உள்ளூர் அளவிலேயே மேற்கொள்வதற்கு உதவி செய்யும் வகையில் சட்ட திருத்தம் விவாதிக்கப்பட்டுவருகிறது. உயர்மட்ட நிர்வாகங்களின் முடிவுகளுக்காக காத்திருந்து அதனால் கால விரையமாதல் மற்றும் பல்வேறு துறைகளுக்கு இடையிலான தகவல் தொடர்பு மற்றும் நிர்வாக முடிவுகளை மேற்கொள்வதன் சிரமங்களை பரிசீலித்து இந்த முடிவுக்கு அவர்கள் வந்துள்ளார்கள்.

மேலும்பொது சுகாதாரம் மற்றும் காப்பீட்டுக்கான சட்டங்களில் செய்ய வேண்டிய திருத்தங்களை அவர்கள் விவாதிக்கிறார்கள், உயிரி பாதுகாப்பு என்பதை தேச பாதுகாப்பின் ஒரு பகுதியாக இணைக்க வேண்டும் என்ற முடிவுக்கும் வந்துள்ளார்கள். வன




உயிரிகளை பாதுகாப்பது மற்றும் கழிவுகளை மேலாண்மை செய்யும் வழிமுறைகளை சீர்திருத்துவது மற்றும் நவீனப்படுத்துவது என்பதாக அவர்களின் அடுத்தகட்ட திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

கொரோனா வைரஸ் தடுப்பு மருந்து மற்றும் சிகிச்சை முறையை வளர்த்தெடுப்பதற்கான ஆய்வுகளும் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மீண்டும் தொற்று பரவல் எங்கிருந்து வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதால் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பு மட்டுமே இந்த போராட்டத்தில் முடிவான ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும்.

**பொருளாதார தாக்கம் குறித்து:**

பொது சுகாதாரத்திற்கும், உற்பத்திக்கும் இடையிலான இயக்கவியல் உறவினை புரிந்து கொண்டவர்கள் மார்க்சியவாதிகள். உற்பத்தியில் தற்காலிக முடக்கம் இருக்கும் என்பதை அறிந்தே அவர்கள் செயல்பட்டார்கள். உலக முதலாளித்துவ நாடுகள் பலவற்றிலும் குறிப்பிடத்தக்க வெற்றியை சாதிக்கும் முன்பே பொருளாதார நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. அது நோய் பரவலில் கேடான விளைவுகளை ஏற்படுத்தியது. சீனாவை பொருத்தமட்டில் தற்காலிக முடக்கத்தை சரியாக பயன்படுத்திக் கொண்டிருப்பது சோசலிச கட்டமைப்பால் கிடைத்த பெரும் நன்மை ஆகும்.

இருவகையான பொருளாதார திட்டங்கள் தேவைப்படுகின்றன. முதலாவது ஊரடங்கு காலத்தில் மக்களின் உயிர் காக்கவும், வருமான இழப்பை ஈடுகட்டவும் செய்யவேண்டிய உதவிகள். இரண்டாவது ஊரடங்கு முடிந்த பிறகாக தேவைப்படுகிற பொருளாதார நடவடிக்கைகள்.

ஊரடங்கு காலத்தில் வேலையில்லாக்கால நிவாரணம் கோரி விண்ணப்பிப்போருக்கு 6 மாதங்களுக்கு ஊதிய காப்பீடு மற்றும் கூடுதலாக விலைவாசி மானியம் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது. 13 லட்சம் நிறுவனங்கள் இக்காலத்தில் வேலையில்லாக்கால இன்சூரன்ஸ் தொகை பெற்றுள்ளன. அவற்றில் பணியாற்றும் 4கோடியே 20 லட்சம் தொழிலாளர்கள் உதவிபெற்றுள்ளார்கள்.

தற்காலிக உதவிக்காக விண்ணப்பிப்போருக்கு தற்காலிக உதவி அறிவிக்கப்பட்டது அவர்களுக்காக 24 மணி நேர தொலைபேசி அழைப்பு அறிவித்து அதன் மூலம் உதவியை கொண்டு சேர்த்தார்கள். குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்தாருக்கு பண உதவித்திட்டம் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு நிதியமைச்சகத்தின் சமூக பாதுகாப்புத் துறையின் சார்பில் 15 ஆயிரத்து 600 கோடி யுவான்கள் (ரூபாயில் 1 லட்சத்து 66 ஆயிரம் கோடிகள்) ஒதுக்கப்பட்டதாக அந்த துறையின் துணை இயக்குனர் வாங் ஜிக்ஜியாங் தெரிவிக்கிறார். இது சீனாவின் மத்திய அரசு ஒதுக்கிய தொகையாகும். மாகாணங்களின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப அவர்கள் பங்கும் சேர்த்து உதவிகள் தரப்பட்டுள்ளன. மேலும் உள்ளாட்சி நிர்வாகங்களும் மக்களுக்கு நேரடி நிதி உதவி செய்கிறார்கள். உதாரணமாக மே மாதத்தில் குவாங்க்டாங் மாகாணத்தில் பைஷலோங் என்ற கிராம கமிட்டி தனது கிராமத்தில் வசிக்கும் அனைவருக்கும் தலா ஆயிரம் யுவான்கள் (குழந்தைகள், சிறுவர்கள் உட்பட) வழங்குவதாக அறிவித்தது. விவசாய வேலைகள் முடங்கியுள்ளதை அடுத்து அவர்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

ஊரடங்கு முடிந்த பிறகு மக்கள் கடைவீதிகளுக்கு செல்வதற்காக சிறப்பு கூப்பன்களை உள்ளூர் நிர்வாகங்கள் அறிவித்து வருகின்றனர்.

நோய் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான செலவு தவிர உபகரணங்கள் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வரித் தள்ளுபடியும், மானியக் கடனும் தரப்பட்டது. சிறு, குறுந்தொழில்கள் மற்றும் கிராமப்புற நிறுவனங்களுக்கு நிவாரணம் அறிவிக்கப்பட்டது.

**பொருளாதார மீட்சிக்கான நீண்ட கால திட்டங்கள்:**

2008 ஆம் ஆண்டு எதிர்கொண்ட உலக பொருளாதார நெருக்கடியை விடவும் பெரிய பாதிப்பை இப்போது எதிர்கொள்ள நேரிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்காலத்தில் (2020 ஜனவரி மற்றும் பிப்ரவரி) சீனாவின் தொழில்துறை உற்பத்தியானது 13.5 சதவீதமாக வீழ்ச்சியை சந்தித்துள்ளது. நகர்ப்புற வேலையின்மை விகிதம் 6.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்கள் சில்லறை வணிகம் 20.5 சதவீதம் குறைந்திருந்தது. இவையெல்லாம் கடுமையாக விளைவுகளே ஆகும்.

ஏப்ரல் மாத கடைசியில் சீனாவின் வேலையின்மை விகிதம் 20.5% ஆக இருக்கலாம் என ஜோங்டான் செக்யூரிட்டீஸ் என்ற தரகு நிறுவனம் தெரிவிக்கிறது. அவர்கள் எதிர்பார்ப்பின்படி 7 கோடிப்பேர் வேலையில்லாமல் இருக்கலாம் என்கிறார்கள்.

வேலையின்மையை எதிர்கொள்வதை தனது அவசர அவசியமுள்ள நடவடிக்கையாக சீனா எடுத்துக் கொண்டுள்ளது. முக்கிய தொழில்துறைகளில் 10 ஆயிரம் நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் முக்கிய நிறுவனங்களில் 4 லட்சம் தொழிலாளர் பணியிடங்களுக்கான தேவை கண்டறியப்பட்டு தொழிலாளர்களை அமர்த்த முன்கை எடுத்திருக்கிறார்கள்.

முதலாளித்துவ நாடுகளின் திறனுள்ள தொழிலாளர்கள் பசியிலும் வேதனையிலும் அச்சத்திலும் செய்வதறியாது திகைக்கிறார்கள். இது உற்பத்தியை மீட்டமைப்பதில் சிக்கலான விளைவுகளை ஏற்படுத்தும்.

சீன அரசானது இடம்பெயர்ந்து பணியாற்றும் தொழிலாளர்கள் தங்கள் பணியிடங்களுக்கு பாதுகாப்பாக திரும்புவது முக்கியம். அதற்காக 1 லட்சத்து 92 ஆயிரம் சிறப்பு வாகனங்கள், 367 சிறப்பு ரயில்கள், 1462 கார்கள் மற்றும் 551 விமானங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.இதன் மூலம் 5.03 மில்லியன் தொழிலாளர்களை அவர்கள் பணியிடங்களுக்கு நேரடியாக சேர்க்கவிருக்கிறது.

ஏற்றுமதி வர்த்தகத்தை பொருத்தமட்டில் சீனாவின் எதிர்காலம் உலக சூழலை பொருத்தே அமையும்.

மே மாத இறுதியில் சீனாவின் 'இரண்டு பேரவைகள்' கூடி விவாதிக்கவுள்ளன. கொரோனா நோய் பரவலின் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட அந்த நிகழ்வு எதிர்வரவுள்ள பொருளாதார சவால்களைக் குறித்து விவாதிக்கவிருக்கிறது. பொருளாதார முனையில் சீனாவின் போராட்டம் அதன் பிறகு தெளிவாகலாம்.

சீனாவின் பொருளாதார நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு இருக்கும் என சீனாவின் ஏடுகள் தெரிவிக்கின்றன.

- மக்களுக்கு பணம் சென்று சேரும் வகையிலான ஊக்கத்திட்டம் அறிவிக்கப்படும். (வேலையில்லாக்கால நிவாரணத்தை உயர்த்துதல் உள்ளிட்டு)
- கட்டமைப்பு திட்டங்களுக்கான ஊக்கத்தை கவனத்தில் கொண்ட நிதிச் செலவினங்கள் மேற்கொள்ளப்படும்.
- சிறு குறுந்தொழில்களுக்கு சிறப்பு கடன்கள் வழங்கப்படும், அவர்களின் வரிகள் தள்ளுபடி செய்யப்படும்.
- ஒவ்வொரு உள்ளூர் அரசு நிர்வாகமும் தங்கள் சூழலுக்கு ஏற்ற முடிவுகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம் உள்ளது. (இது பெரிய நிறுவனங்களுக்கு மட்டும் சலுகைகளை அள்ளிக் கொடுக்கும் முதலாளித்துவ அணுகுமுறைக்கு நேர்மாறானதாகும்)
- உற்பத்தி பழைய நிலைமைக்கு திரும்பியவுடன் வழங்கல் தொடர்பும் சீராக்கப்படும்.
- தனது சந்தையை உலகிற்கு திறப்பது மற்றும் உள்நாட்டு சந்தை சார்ந்த சீர்திருத்தங்களை தொடர்ந்து மேற்கொள்ளும்.
- பொருளாதாரத் திட்டங்கள் அனைத்தின் முதன்மை நோக்கம் வேலைவாய்ப்பை மீட்டமைப்பதாகவும், ஏழை மக்களை பாதுகாப்பதாகவும் இருக்கும்.

முதலாளித்துவ ஊடகங்கள் இந்தியாவைப் போலவே சீனாவிலும் தொழிலாளர்கள் நலத்திட்டங்களை வெட்டுமாறு ஆலோசனைகள் வைக்காமல் இல்லை. முதலாளிகள் தொழிலாளர்களுக்கு தரும் சம்பளம் அல்லாது 30 சதவீத தொகையை நலத்திட்டங்களுக்கு செலுத்த வேண்டும். ஓய்வூதியம், மருத்துவக் காப்பீடு, வேலையில்லாக் கால காப்பீடு, பணிக்கால விபத்துக் காப்பீடு மற்றும் பேறுகால காப்பீட்டு தொகைகளை ரத்து செய்ய வேண்டும் என்பது முதலாளித்துவ அறிஞர்களின் எதிர்பார்ப்பாகும். பொருளாதார தளத்தில் எழக்கூடிய சவால்களை அந்த நாடு எப்படி எதிர்கொள்ளவுள்ளது என்பதை வரும் நாட்களில் பார்க்கலாம்.

இந்த நெருக்கடிகளை சமாளித்துக் கொண்டே வறுமை ஒழிப்பு இலக்கை நோக்கியும் சீனா நடைபோடத் தொடங்கியுள்ளது. உலகம் நிர்ணயித்திருக்கும் வறுமைக்கோட்டு அளவுகோலுக்கு கீழே ஒருவரும் வாழாத நாடாக சீனத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பது அந்த கட்சி வகுத்துக்கொண்ட மிக முக்கியமான இலக்கு. வைரசை எதிர்கொள்வதில் கிடைத்த வெற்றியைப் போலவே இதிலும் வெல்வோம் என்கிறார்கள்.

வறுமையும், நோயும் மனித குலத்தின் பொது எதிரி. இவைகளுக்கு எதிரான போராட்டத்தில் சோசலிசமே உற்ற துணையாகும் என்பதை சீனா எடுத்துக் காட்டட்டும்.

**நன்றி: மார்க்சிஸ்ட்**

# இந்தியாவுக்கு சீன நிறுவனம் பாராட்டு!

**கொ**ரோனா காலத்தில் உலகில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்தியா மருந்து விநியோகம் செய்து மதிப்புடன் திகழ்வதாக சீன மருந்து நிறுவனம் ஒன்று பாராட்டு தெரிவித்துள்ளது. சீன தலைநகர் பெய்ஜிங்கை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஷாங்காய் கோப்ரேசன் ஓர்கனைசேசன் (Shanghai Cooperation Organisation) என்ற நிறுவனமே இவ்வாறு பாராட்டியுள்ளது. இதன் பொதுச்செயலாளராக விளாடிமிர் நோரோவ் (Vladimir Norov) என்பவர் உள்ளார்.

இவர், ஐ.நா.வின் நிரந்தரம் அல்லாத உறுப்பினராக இந்தியா தேர்வானதற்கு வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார். அப்போதுதான், "கொரோனா காலத்தில் இந்தியா 133-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு மருந்து விநியோகம் செய்து வருகிறது. இந்தியாவின் இந்த நடவடிக்கை அதன் தனித்துவத்தை வெளிக்காட்டுகிறது" என்று பாராட்டு தெரிவித்துள்ளார். இந்தியாவில் உள்ள திறமைமிக்க விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் இந்த கொரோனா வைரஸ் குறித்து வலுவான ஆராய்ச்சியை முன்னெடுத்து சரியான மருந்தைக் கண்டறிவார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# ஈரான் - வெனிசுவேலா ஒருமைப்பாடு அமெரிக்கத் தடையைத் தகர்த்தெறிந்தது!

அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் ஈரானுக்கும் வெனிசுவேலாவுக்கும் எதிராகப் பல கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமை உலகம் அறிந்த சங்கதி. ஆனால் இந்தத் தடைகளில் ஒன்றை இரு நாடுகளும் கூட்டாக முறியடித்துள்ளன.

வெனிசுவேலாவின் தேசிய வருவாய் எண்ணெய் உற்பத்தியாகும். வேறு எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவுக்கு வெனிசுவேலாவில் மட்டும் 300 மில்லியன் பீப்பாய்கள் அளவிலான எண்ணெய் வளம் உண்டு. வெனிசுவேலாவின் வருமானத்தில் 95 சதவீதம் எண்ணெய் ஏற்றுமதியால் கிடைப்பதாகும். எனவே இந்த எண்ணெய் ஏற்றுமதியைத் தடுப்பதன் மூலமும், அந்த உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய விடாமல் தடை போடுவதன் மூலமும், வெனிசுவேலாவில் மதுரோ தலைமையில் உள்ள சோசலிச அரசைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா பலவித முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலைமையில் வெனிசுவேலாவின் எண்ணெய் உற்பத்திக்குத் தேவையான ஒருவகை திரவத்தை ஏற்றிக்கொண்டு ஈரானின் 5 எண்ணெய்த்தாங்கிக் கப்பல்கள் மே 23 மற்றும் 25ஆம் திகதிகளில் வெனிசுவேலாவைச் சென்றடைந்துள்ளன. (மசகு எண்ணெயைச் சுத்திகரிப்பதற்கான இத்திரவத்தை வெனிசுவேலா உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாதபடி அமெரிக்கப் பொருளாதாரத் தடை தடுத்துவிட்டதாலேயே வெனிசுவேலா இதை ஈரானிடமிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது) ஈரானியக் கப்பல்கள் கரீபியன் கடலின் ஊடாக வெனிசுவேலாவின் கடல் பிராந்தியத்துக்குள் நுழைந்த போது வெனிசுவேலாவின் கடற்படையும் விமானப் படையும் அவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கின. அமெரிக்கத் தடையை முறியடித்த இந்த நிகழ்வை தலைநகர் கரகாஸில் உள்ள மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கொண்டாடினர்.




வெற்றிகரமான இந்த நிகழ்வு குறித்துக் கருத்துத் தெரிவித்த வெனிசுவேலாவின் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஆர்ரீஸா (Jorge Arreaza), "ஈரானும் வெனிசுவேலாவும் நெருக்கடியான நேரங்களில் எப்பொழுதும் ஒருவரை ஒருவர் ஆதரித்து வந்துள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார். (கார்டியன், மே 23)

இந்த நிகழ்வு குறித்து தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்ட சோசலிச கியூபாவின் ஜனாதிபதி மிக்கேல் டியாஸ்–கனெல் (Miguel Diaz-Canel), "மக்களுக்கடையிலான ஒருமைப்பாடு நீடூழி வாழ்க!" என வாழ்த்தியுள்ளார்.

2017 ஓகஸ்டில் ட்ரம்ப் நிர்வாகம் வெனிசூலா மீதான பொருளாதாரத் தடைகளை மேலும் கடுமையாக்கியது. அது 2019 ஜனவரியில் வெனிசுவேலா அரசுக்குச் சொந்தமான PDVSA என்ற எண்ணெய் நிறுவனம் அமெரிக்காவுக்குள் விற்பனையில் ஈடுபடுவதற்குத் தடை விதித்ததோடு, அமெரிக்காவிலிருந்து வெனிசுவேலாவுக்கு எரிபொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கும் தடை விதித்தது. அத்துடன் அமெரிக்காவிலிருந்த வெனிசுவேலாவின் சொத்துக்களை முடக்கிய ட்ரம்ப் நிர்வாகம், அமெரிக்காவின் தனிப்பட்ட மற்றும் கோப்பரேட் நிறுவனங்கள் வெனிசுவேலாவின் அரச நிறுவனங்களுடன் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கும் தடை விதித்தது. இந்தத் தடை பின்னர் அமெரிக்கர்களுக்குச் சொந்தமில்லாத நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

இதனால் வெனிசுவேலாவின் எண்ணெய் உற்பத்தி 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் கடும் சரிவைச் சந்தித்தது. ஆனால் 2019இல் நிலைமை சற்றுச் சீரானது. ஆனால் அமெரிக்க திறைசேரி ரஷ்யாவின் மிகப்பெரிய எண்ணெய் உற்பத்தி நிறுவனமான Rosneft இற்கு தடை விதித்தது. இதன் நோக்கம் வெனிசுவேலா அரசாங்க எண்ணெய் நிறுவனத்தின் 60 வீதமான உற்பத்தியை இந்த ரஸ்ய நிறுவனம் கையாண்டு வந்ததால் அதைத் தடுப்பதே. இதன் காரணமாக அந்த ரஷ்ய நிறுவனம் மார்ச்சில் வெனிசுவேலாவில் தனது செயல்பாட்டை நிறுத்தியது.

ஈரான் வெனிசுவேலாவின் மிகப்பெரிய எண்ணெய் நிறுவனத்தைச் சீரமைப்பதற்கு தொண்டு அடிப்படையில் தொழில்நுட்ப உதவி செய்ய முன்வந்தது. ஈரானிலிருந்தும் சீனாவிலிருந்தும் வந்த தொழில்நுட்பவியலாளர்கள் தமது வேலையை ஆரம்பித்தனர். சமீபத்தில் 700 தொன் எடையுடைய எண்ணெய் சுத்திகரிப்பதற்கான மற்றும் தேவைகளுக்கான உபகரணங்களை ஈரானிலிருந்தும் சீனாவிலிருந்தும் 20 ஈரானிய விமானங்கள் வெனிசுவேலாவுக்கு எடுத்து வந்தன.

இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா, வெனிசுவேலாவுக்கான தனது நாட்டின் விமானப் பாதையைத் தடை செய்யப் போவதாக ஈரானை மிரட்டியது. அத்துடன் மற்றைய நாடுகளும் தமது நாடுகளுக்கு மேலால் ஈரானிய விமானங்கள் பறப்பதற்குத் தடை விதிக்குமாறும், வெனிசுவேலாவுடனான எண்ணெய் இறக்குமதி செயல்பாடுகளை நிறுத்துமாறும் அமெரிக்கா மிரட்டியுள்ளது.

அமெரிக்கா சுயாதிபத்தியம் உள்ள நாடுகளான ஈரானுக்கும் வெனிசுவேலாவுக்கும் எதிராகப் பொருளாதாரத் தடைகளை மட்டுமின்றி, இராணுவ ரீதியிலான மிரட்டல்களையும் தொடர்ச்சியாக விடுத்து வருகிறது. அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் ட்ரம்ப் தாம் வெனிசுவேலாவைச் சுற்றி வளைத்துள்ளதாக அறிவித்திருந்தார். இந்த நிலைமையில்தான் ட்ரம்பின் மிரட்டலையும் பொருட்படுத்தாது ஈரானிய எண்ணெய்க் கப்பல்கள் வெனிசுவேலாவைச் சென்றடைந்துள்ளன. ஆனால் இதுபற்றி அமெரிக்கா எதுவித எதிர்ப்பு நடவடிக்கையிலும் இதுவரை ஈடுபடவில்லை.

அமெரிக்கத் தலையீடு குறித்து கடுமையான எச்சரிக்கை விடுத்த ஈரானிய ஜனாதிபதி ஹஸன் ரவ்ஹானி (Hassan Rouhani), "எமது கப்பல்கள் கரீபியன் பகுதியிலோ அல்லது உலகின் வேறெந்தப் பகுதியிலோ அமெரிக்காவின் ஏதாவது தொல்லைக்குள்ளானால் பெரும் பிரச்சினை ஏற்படும். எமது சுயாதிபத்தியம், பிராந்திய ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாப்பதற்கும், எமது தேசிய நலன்களுக்காகப் பாடுபடுவதற்கும் எமக்கு சட்டபூர்வமான உரிமை உண்டு" எனக் கூறியுள்ளார். (கார்டியன்)

கடந்த ஏப்ரலில்தான் அமெரிக்கா வெனிசுவேலாவுக்கு மிக அருகில் மேலதிக யுத்தக் கப்பல்களையும், உளவு விமானங்கள், மேலதிக நாசகாரிகள், விசேட நடவடிக்கைக் குழுக்கள் என்பனவற்றையும் அனுப்பி வைத்தது.

ஈரான் வெனிசுவேலாவுக்கு எண்ணெய் கப்பல்கள் அனுப்பியது குறித்து ரஸ்யா, சீனா, கியூபா, ஈரான், வெனிசுவேலா என்பனவற்றைக் கடுமையாக வசைபாடிய அமெரிக்கா, தனது போர்க் கப்பல்கள் கரீபியன் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் எனவும் மிரட்டியுள்ளது.

இதேவேளை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் மே 22இல் தீர்மானம் ஒன்றைச் சமர்ப்பித்த ஐ.நாவுக்கான ரஷ்யப் பிரதிநிதி டிமிட்ரிபொல்யன்ஸ்கிவ் (Dmitri Polyanskiv), வெனிசுவேலாவில் எவ்விதமான தலையீடும் இருக்கக்கூடாது எனக் கோரியுள்ளார். அத்துடன் மே 3 – 4இல் வெனிசுவேலாவின் பொலிவேரியன் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்கா எடுத்த சதி முயற்சியும் கண்டிக்கப்பட்டுள்ளது. ரஸ்யாவின் தீர்மானத்தில், உறுப்பு நாடுகள் பலாத்காரப் பிரயோகம், கூலிப்படைகளைப் பயன்படுத்துதல், சகல விதமான பயங்கரவாதச் செயல்கள் என்பனவற்றைக் கண்டிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் இந்தத் தீர்மானத்துக்கு பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளான சீனா, இந்தோனேசியா, தென் ஆபிரிக்கா, வியட்நாம் ஆகியன ஆதரவு தெரிவித்துள்ளன.

வெனிசுவேலாவின் மதுரோ அரசாங்கத்தைத் தூக்கி எறிவதற்காக அமெரிக்காவின் இராணுவ விசேட படையணியின் அதிகாரிகளின் தலைமையில் 60 பேர் கொண்ட கூலிப்படையினர் அதி விரைவுப் படகுகளில் வந்தபோது அந்த முயற்சி வெனிசுவேலா இராணுவத்தால் முறியடிக்கப்பட்டது. இவர்களுக்கு அருகேயுள்ள கொலம்பியாவில் உள்ள முகாம்களில் வைத்துப் பயிற்சி அளிப்பதற்கான நிதியை வெனிசுவேலாவின் எதிர்ப் – புரட்சியாளன் யொன் கொய்கோசியா (Yon Goicoechea) வழங்கியிருந்தான்.

அமெரிக்காவின் இத்தகைய கொடுஞ் செயல்களுக்கு மத்தியிலும் கொரோனா வைரசைக் கட்டுப்படுத்துவதில் ஈரானும் வெனிசுவேலாவும் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிலைநாட்டியுள்ளன.

வெனிசுவேலா தனது எண்ணெய் ஏற்றுமதி மூலமே தனக்குத் தேவையான அத்தியாவசிய உணவு மற்றும் மருந்து வகைகளை இறக்குமதி செய்து வந்தது. ஆனால் அமெரிக்கத் தடைகள் அதில் பாதிப்பை ஏற்படுத்தியதால், வெனிசுவேலா மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். இருந்தும் தமது அன்புக்குரிய காலம் சென்ற தலைவர் சாவேஸ் தொடக்கி வைத்த பொலிவேரியப் புரட்சியைத் தொடர்ந்து முன்னெடுத்து வரும் நாட்டின் இன்றைய தலைவர் மதுரோவுக்கு ஆதரவாக அணிதிரண்டு நிற்கின்றனர்.

(இந்தக் கட்டுரைக்கான தகவல்கள் Orinoco Tribune, TeleSUR and Venezuela Analysis என்பனவற்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன)



# வீரகத்தி சேந்தன் மறைந்தார்

**க**ரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி சேந்தன் அவர்கள் *12–06–2020* அன்று 71 வயதில் காலமாகினார். இவர் காலஞ்சென்ற பண்டிதர் க. வீரகத்தி அவர்களின் மூத்த புதல்வராவார். சேந்தன் பாடசாலை கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும், பின்னர் பொறியியல் பட்டப்படிப்பினை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டவர். இவரது மரணம் அறிவுசார் தளத்தில் இலங்கையின் ஒட்டுமொத்த சமூகங்களிற்கும் ஈடுசெய்யப்பட முடியாத இழப்பாகும்.

சேந்தன் இயந்திரவியல் துறையில் படிப்பை முடித்தவுடனேயே, தனது நிபுணத்துவத்தும் சார்ந்து சமூகத்தில் பல அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட ஆரம்பித்தார். *1977* ஆம் ஆண்டளவில் கனடாவிற்கு வந்தவர், அக்காலத்தில் மேற்கு நாடுகளுக்கு வந்தவர்கள் பலர் போன்று, நிரந்தர வதியுரிமை பெற்று கனடாவிலேயே தனது எஞ்சிய காலத்தைக் கழித்திருக்கலாம். ஆனால் தனது கல்வி, தனது சொந்தநாட்டு மக்களுக்கே பயன்பட வேண்டுமென்று கருதி, கனடாவிலிருந்து திரும்பி, யாழ் நகரில் Skylark Engineering என்ற சிறிய ரக இயந்திரவியல் தொழிற்சாலையை ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தியவர். அத்தொழிற்சாலையில் பணிபுரிந்த சகல தொழிலாளர்களுடனும் மிகவும் அன்பாகவும் சமத்துவத்துத்துடனும் நடந்து கொண்டாரென தெரிகின்றது.

வடக்குக் கிழக்கில் எந்தவொரு செயற்பாட்டையும் (சமூக நிர்வாகம், அபிவிருத்தி, அரசியல், பொருளாதாரம், பத்திரிகைத்துறை, கலை-இலக்கியம்) *1986* ஆம் ஆண்டின் பின்னர் புலிகள் சுயாதீனமாக இயங்க அனுமதிக்காத நிலை இருந்தது. சகலவற்றையும் 'துப்பாக்கி' எனும் அசுர பலத்தோடு, புலிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளும் கண்காணிப்பு வலைக்குள்ளேயுமே வைத்திருந்தனர். சேந்தன் அரசியலில்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# ஜோர்ச் ஃப்ளாய்ட்டின் மரணமும் அநீதிக்கு எதிராக இனப் போராட்டமும்



பெரும் தொற்று அபாயம் சூழ்ந்திருக்கும் இந்தக் காலகட்டத்தில், அமெரிக்க மக்கள் தெருவுக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். 'கொரோனா தீநுண்மி நோய்த்தொற்று தாக்கி மரணிப்பதைவிட, போராட்டக் களத்தில் துணிந்து நின்று உயிரை இழப்பதே மேல்' என்ற நிலைக்கு அமெரிக்க கருப்பினத்தவர்கள் வந்துவிட்டார்கள். அவர்களுக்கு வாக்குரிமை உண்டு. அவர்களுக்கான சுதந்திரமும் உண்டு. ஆனால், அந்தச் சுதந்திரத்தால் கிடைக்கும் உரிமைகள் உண்டா? இதுதான் மெய்யான ஜனநாயகமா என்ற கேள்வியை எழுப்பி வெள்ளை மாளிகையை நோக்கி போராட்டக்காரர்கள் நியாயம் கேட்டு நிற்கிறார்கள்.

வெள்ளை மாளிகையில் வசிக்கும் அந்த நாட்டின் அதிபர் ட்ரம்ப்போ பதுங்கு குழிக்குச் சென்று தங்கியிருப்பதாக அந்த நாட்டு ஊடகங்கள் பறைசாற்றுகின்றன. போராட்டத்துக்கான வலிமையும் கூர்மையும் எத்தகையது என்பதைப் பதுங்கு குழியே ஊருக்கும் உலகுக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

தங்கள் மீது காட்டப்படும் காழ்ப்புணர்ச்சி காரணமாக கடந்த மே 25-ஆம் தேதிமுதல் பல்வேறு அமெரிக்க மாகாணங்களில் கறுப்பினத்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், டெக்ஸாஸ் மாகாணத்தில் காவல் துறை மூத்த அதிகாரி ஆர்ட் அசெவெடோ அமெரிக்க அதிபருக்கு ஓர் அறிவுரை கூறியிருக்கிறார். இது சமூக ஊடகங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. "அனைத்து காவல் துறை அதிகாரிகளின் சார்பாகப் பேசுகிறேன்" என்று அவரின் பேச்சு தொடங்குகிறது. "அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறுவதற்கு ஆக்கபூர்வமான விஷயம் எதுவும் இல்லையென்றால் வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கவும்" என்று பேசியிருக்கிறார்.

இனவெறிக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராட்டக்காரர்களை நோக்கி, அவர்கள் உள்நாட்டுப் பயங்கரவாதிகள் என்றும், வன்முறை – போராட்டத்தில் மேலும் ஈடுபட்டால் ராணுவம் வரவழைக்கப்படும் என்றும் கூறினார் அதிபர் ட்ரம்ப். மேலும், ஒருபடி மேலே சென்று அமெரிக்க சொத்தை யாராவது கொள்ளையடித்தால் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் என்றும் அவர் பேசியிருக்கிறார். இந்தப் பேச்சுக்குப் பின்னர்தான் போராட்டங்கள் வன்முறைகளாக மாறியிருக்கின்றன. அதனால்தானோ என்னவோ காவல் துறையினரையும் எதிர்த்து போராட்டக் குழுக்கள் கடும் தாக்குதலிலும் ஈடுபட்டு வருவதாக ஊடகங்கள் மூலம் தெரிந்துகொள்ள முடிந்தது.

அமெரிக்காவில் ட்ரம்ப்பை ஆதரிக்கும் – இன வெறுப்பையும், மத வெறுப்பையும் உமிழும் தீவிர வலதுசாரி அரசியல் குழுக்கள் வெள்ளை நிறமா, கருப்பு நிறமா என்ற போட்டியில் இந்தக் கொரோனா தீநுண்மி நோய்த்தொற்று பரவிக்கொண்டிருக்கும் இக்கட்டான காலகட்டத்தில், அடக்குமுறைக்கான போரை நிகழ்த்த இதுதான் சரியான தருணம் என்று ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ என்ற சந்தேகம் எழுகிறது. கொரோனா தீநுண்மி நோய்த் தொற்று பரவும் வேகத்தைவிட, இன வெறுப்பு அதிவேகமாகப் பரவுகிறது.

முனைவர் வைகைச்செல்வன்

மனிதகுலத்துக்கு விடப்பட்டுள்ள சவால் என்கிற பல்வேறு கேள்விக்குறிகளைத் தாங்கி நின்றது அந்தக் கொடூரச் சம்பவம். இவை சமூக அநீதிக்கு இழைக்கப்பட்ட கொடூரத் தாக்குதலாகவும், இன வெறியின் உச்சகட்ட நடவடிக்கையாகவும் உலகம் முழுவதும் கொந்தளிப்புகள் எழுந்தன.

"இது இனவெறியின் வெளிப்பாடுதான் அதில் என்ன சந்தேகம்" என்று கேட்பவர்களும் உண்டு. கருப்பினத்தவர்களுக்கு எதிராக நீண்ட நாள்களாகக் காட்டப்படும் வெறுப்புணர்ச்சியின் அடையாளம்தானே இந்த நிகழ்வு. இன்று, நேற்று நடக்கின்ற சம்பவமா இது? 17-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கியிருக்கிறது இந்தப் போராட்டம்.

வாழ்வதற்கும், சாவதற்குமான நிகழ்வாக கடந்துபோக வேண்டியதாய் இருக்கிறது. மார்ட்டின் லூதர் கிங், ஆபிரகாம் லிங்கன் ஆகியோர் கருப்பினத்தவர்களின் விடுதலையை கண்ணீருடன் துடைத்தார்கள். ஆனால், அந்தக் கண்ணீர் காய்வதற்கு முன்பே அதே மண்ணில் மார்ட்டின் லூதர் கிங், ஆபிரகாம் லிங்கன் ஆகியோர் இனவெறிக்குத் தங்களின் உயிரைப் பரிசாகத் தரவேண்டிய துரதிருஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அமெரிக்காவில் வசிக்கும் கறுப்பினத்தவர்கள் லிங்கனின் ரத்த சாட்சியோடு தங்களின் இருண்ட பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். கொரோனா தீநுண்மி நோய்த்தொற்று காலகட்டத்தில் கருப்பினத்தவருக்கு நேர்ந்த கொடூரச் சம்பவம் மனிதத் தன்மையையே உலுக்கிவிட்டது.

மனிதனை மனிதனாகப் பார்க்க வேண்டும் என்று யார் இவர்களிடம் போய்ப் பாடம் நடத்துவார்கள்? விரைவில் அமெரிக்க தேர்தல் நடைபெற உள்ள நிலையில், வெள்ளை, கருப்பு என்கிற நிற பேதம் மனிதத் தன்மைக்கு சவால் விடும் செயல்கள் அல்லவா? கருப்பு உயிரா, வெள்ளை உயிரா என்ற கேள்வியை எழுப்பினால், அங்கு மானுடப் பற்று காணாமல் போய் விடாதா? எதற்கு நீங்கள் வாக்களிப்பீர்கள் என்ற சவால்கள் எழாமல் இல்லை.

அமெரிக்காவின் மினசோட்டா மாகாணத்தின் தலைநகரான மினியாபொலிஸ் நகரில் ஒரு காருக்கு அடியில் ஒரு மனிதர் கைவிலங்கிட்டிருப்பதைப் போன்றும், அவரின் கழுத்தின் மேல் முழங்காலை வைத்துக் காவலர் அழுத்துவதும், என்னால் மூச்சு விடமுடியவில்லை என்று அந்தக் கருப்பின இளைஞர் ஜோர்ஜ் ஃப்ளாய்ட் கூறுவதும், "தயவு செய்து என்னைக் கொல்லாதீர்கள்" என்று

கதறுவதும், மனதை உருக்கி நெகிழச் செய்கின்ற ஒன்றாகும். அமெரிக்காவில் கருப்பினத்தவர்கள் போலீஸாரால் கொல்லப்படுவது குறித்து ஏற்கெனவே பல குற்றச்சாட்டுகள் இருக்கும் நிலையில், இந்தச் சம்பவம் மேலும் பதற்றத்தை அதிகப்படுத்தியது.

கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், ரப்பர் குண்டுகளையும் கொண்டு போராட்டக்காரர்களை போலீஸார் கலைத்துவிடலாம். நடைபெற்ற கொடூரச் சம்பவம் படிந்துவிட்ட வரலாற்றின் கறுப்பு அத்தியாயத்தை எதைக் கொண்டு கலைக்க முடியும்? எதைக் கொண்டு அழிக்க முடியும்?

"எனது சகோதரர் திரும்பி வரப் போவதில்லை, எங்களுக்கு நீதி வேண்டும்" என்று கண்ணீர்மல்க ஜோர்ஜின் சகோதரர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டி, மனிதகுலத்துக்கு எழுப்பிய அதிர்வலையாகவே நாம் பார்க்க வேண்டும்.

உலக நாடுகள் பலவும் இந்தப் படுகொலை குறித்து நிறையப் பேசுகின்றன. இது குறித்தான நீதியை அவர்களால் எப்படிப் பெற முடியும்? இருந்தபோதிலும், ஒரு ஜனநாயக நாடான அமெரிக்கா அதற்கான பதிலை ஜனநாயக மாண்புகளுக்குச் சொல்லித்தானே ஆக வேண்டும்.

வடக்கு கரோலினா (North Carolina) மாகாணத்தில், ஃபேயட்வில் (Fayetteville) நகரத்தில் 1973-இல் பிறந்த கருப்பினத்தவரான ஜோர்ஜ் ஃப்ளாய்ட் (George Floyd), வளர்ந்ததெல்லாம் டெக்ஸாஸ் (Texas) மாகாணத்தில் ஹவுஸ்டன் (Houston) நகரத்தில்தான். பள்ளிப் பருவத்தில் ஒரு சிறந்த விளையாட்டு வீரனாக வேண்டும் என்ற கனவைக் கண்டு கால்பந்து, கூடைப்பந்து அணிகளில் சேர்ந்து விளையாடி தனது ஆர்வத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். 2014-இல் மினிசோட்டா (Minnesota) மாகாணத்தில், மினியாபொலிஸ் (Minneapolis) நகரத்துக்குப் புலம்பெயர்ந்து, ஒரு கிளப்பில் காவலாளியாக சற்றேறக்குறைய 5 ஆண்டுகள் தனது பணியை ஆர்வத்துடன் நிறைவேற்றி வந்தார்.

இந்தக் கொரோனா தீநுண்மி நோய்த்தொற்று உலக நாடுகளில் பல பேரைப் புரட்டிப் போட்டிருக்கிறது. உள்ளூர் பொருளாதாரம் முதல் உலகளாவிய பொருளாதாரம் வரை, வேலைவாய்ப்பின்மை என்று பல்வேறுபட்ட நெருக்கடிகளைத் தந்து, இந்த உலகைச் சூறையாடியது போதாது என்று இன்னும் தீராத வெறியோடு நோய்த்தொற்று தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

இந்தக் கொரோனா தீநுண்மி நோய்த்தொற்று நெருக்கடியால் வேலை இழந்த சில கோடி அமெரிக்கர்களில் ஜோர்ஜ் ஃப்ளாய்டும் ஒருவர். அவரின் கனவு வாழ்க்கையில் 22 வயதிலும், 6 வயதிலும் இரண்டு செல்வ மகள்கள் இருக்கிறார்கள். மே 25-ஆம் தேதி மாலை மினியாபொலிஸ் நகரத்தில் உள்ள கடைக்குச் சென்று 20 டாலர்களைக் கொடுத்து சிகரெட் வாங்கியிருக்கிறார் ஜோர்ஜ் ஃப்ளாய்ட். அவர் கொடுத்த டாலர் கள்ள நோட்டாக இருக்குமோ என்ற சந்தேகத்தில் அந்தக் கடையின் ஊழியர் காவல் துறைக்குத் தகவல் தெரிவித்திருக்கிறார். சற்று நேரத்தில் இரண்டு போலீஸ்காரர்கள் அங்கு வர, ஃப்ளாய்டைக் கைது செய்யும் படலம் தொடர்கிறது.

தனக்கு 'கிளாஸ்ட்ரோ போபியா' (Claustrophobia – அடைத்து வைத்திருக்கின்ற இடங்களில் உருவாக்கும் பீதி) என்கிற நோய் இருக்கிறது என்கிறார் ஃப்ளாய்ட். இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாத காவல் துறையினர், ஃபிளாய்டை காரில் ஏற்ற முயற்சிக்கும்போது அவர் கீழே விழுகிறார். இப்படி இரண்டு, மூன்று முறை காரில் ஏற்றும்போது கீழே விழுகின்ற காரணத்தினால், ஃப்ளாய்டின் கையையும், காலையும் பிடித்திருக்க அவர்கள் கழுத்தின் மீது முழங்காலை வைத்து டேவிட்சாவின் என்ற காவலர் அழுத்துகிறார். இந்தச் செயல் 8 நிமிஷங்கள் நீடித்தது. பின்னர், நாடித் துடிப்பை பரிசோதித்துப் பார்க்கையில் துடிப்பில்லை. ஆம், அவர் இறந்து விட்டார்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பது அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தின் தாரக மந்திரம். இந்த அநீதிக்கு என்ன சொல்லப் போகிறது?

-தினமணி, ஜுன் 13

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

உழைத்துக் கொண்டிருக்கின்றனர். பெருந்தொற்றுக்குப் பிறகு மீளும் உலகம் மேலும் கொடுங்கோன்மையுடனும், மேலும் கட்டுப்பாடுகளும் கண்காணிப்புகளும் சூழ்ந்ததாகவும் ஆக்கும் பணிதான் அது. தொழிலாளர் சட்டங்கள், சுற்றுச்சூழல் விதிமுறைகள் ஆகியவற்றைத் தளர்த்துவது அதன் ஒருபகுதி தான். அதற்கு எதிரான சக்திகள் உலகம் முழுவதும் உள்ளன. இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் அமெரிக்காவின் சான்டர்ஸ் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட 'ப்ராக்ரசிவ் மூவ்மென்ட்' (Progressive Movement), ஐரோப்பாவின் 'டிஐஇஎம்25' (Democracy in Europe Movement 2025 -DiEM25) இயக்கம் போன்றவை உலகம் எங்கிலும் உள்ள முற்போக்குக் குரல்களை ஒருங்கிணைக்கின்றன. இந்தியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஐஸ்லாந்து எனக் குரல்கள் எழுகின்றன. பெருந்தொற்று சூழ்நிலையிலிருந்து ஒரு பெரும் விலைகொடுத்து நாம் குணமாகி வெளியே வரப்போகிறோம். ஆனால், துருவப் பகுதிகளில் உருகும் பனித்தகடுகளை நாம் மீட்கவே போவதில்லை. புவி வெப்பமாதல் ஏற்படுத்தியிருக்கும் மோசமான விளைவுகளிலிருந்து நாம் திரும்பிச் செல்ல முடியாது. தெற்காசியா வாழ முடியாத பகுதியாக மாறிவிடும். அடுத்த பல தசாப்தங்களிலும் அந்த நிலையே தொடரும். இந்தியா உள்ளிட்ட சில நாடுகள், இந்தச் சூழ்நிலை மேலும் மோசமாகாமல் தடுக்க தன்னால் முடிந்த பணிகளைச் செய்கின்றன.

ஆனால், உலகின் மிகப் பெரிய சக்தியைக் கொண்ட நாடான அமெரிக்காவோ, பாதாளத்தை நோக்கிப் போட்டி போட்டுக்கொண்டு ஓடுகிறது. இந்த மாதிரியான சூழ்நிலையில் ஜோர்ச் ப்ளாய்ட் கொல்லப்பட்டதற்கு எதிர்வினையாக நாடெங்கும் எழுந்த போராட்டத்தை நல்ல அறிகுறியாகச் சொல்வேன். 1992–ல் ரோட்னி கிங் கொல்லப்பட்ட சூழ்நிலையை ஒப்பிட்டுப் பார்க்கிறேன். அமெரிக்க ஜனத்தொகையில் ஒரு பகுதி மேலதிகமாக நாகரிகத்தையும் விழிப்புணர்வையும் புரிதலையும் அடைந்துள்ளது. இன்னும் மேம்பட வேண்டும். இந்த மாற்றம் நம்பிக்கை அளிக்கிறது. ஆனால், அடிப்படைப் புரிதலில் மாற்றம் வேண்டும். சட்டங்களால் அதைச் செய்ய முடியாது. அப்படியான அடிப்படைப் புரிதலில் மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

(கேரள அரசு ஒருங்கிணைத்த 'கேரளா டயலாக்' - Kerala Dialogue நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அமெரிக்க அறிஞர் நோம் சோம்ஸ்கி உரையின் சுருக்கப்பட்ட வடிவம் இது. பேட்டி கண்டவர் Dr வீ.கே. இராமச்சந்திரன், கேரளா அரசின் திட்டமிடல் சபையின் உதவித்தலைவர். தமிழில்: ஷங்கர்)

**முன்பக்கத் தொடர்ச்சி...**

முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான, இடதுசாரிக் கட்சிகள் மற்றும் ஜனநாயக – தேசபக்த சக்திகள் உள்ளடங்கியதும், தற்பொழுது சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலானதுமான அதே ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வின் காரணமாகவே வெளிப்பட்டு வந்திருக்கிறது. இதில் நாட்டின் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்கள மக்களே எப்பொழுதும் பெருமைப்படும் வகையில் முன்னணிப் பாத்திரம் வகித்து வந்திருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்சவின் வெற்றி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அவர் சார்ந்த கட்சியே வெற்றி பெறும் என்பதை முன்கூட்டியே கட்டியம் கூறிவிட்டது. அதுவும் இப்பொழுது ஐக்கிய தேசியக் கட்சி இரண்டு அணிகளாகப் போட்டியிடும் சூழலிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்னைய காலங்களைப் போல தீவிரமான ஐ.தே.க. ஆதரவு நிலைப்பாட்டை எடுக்காத சூழலிலும், பொதுஜன பெரமுனவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரே அணியாகப் போட்டியிடும் சூழலிலும் கோத்தபாய அணியினரின் வெற்றி திட்டவட்டமான ஒன்று. இருக்கின்ற ஒரேயொரு பிரச்சினை கோத்தபாய அணியினருக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா என்பதே.

ஆனால் அதிலும் கூட தேர்தல் முடிவடைந்து கோத்தபாய அணியினரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், அரசியலில் சில மாற்றங்கள் ஏற்படும் வாய்ப்பு உண்டு. தேர்தல் முடிவடைந்த பின்பு தோல்வியடையும் இரண்டு ஐ.தே.க. அணிகள் மத்தியிலும் மேலும் முரண்பாடுகள் தீவிரமடையும். அதன் காரணமாக இரண்டு அணிகளிலும் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் அடுத்த ஐந்து வருடங்களும் வெறுமனே 'காய்ந்து' கொண்டிருக்க விரும்பாமல் அரசாங்கத்தின் பக்கம் தாவக்கூடிய நிகழ்ச்சிகளும் நடைபெறலாம்.

மொத்தத்தில் கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.கவுக்கு ஏற்பட்ட சரிவு நிலையும், அதன் பின்னரான பிளவுகளும், அக்கட்சியின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. அக்கட்சியின் எதிர்காலம் இருள் சூழ்ந்துள்ளது. அடுத்த சுமார் 20 வருடங்களுக்கு அக்கட்சி தலைநிமிரவோ அல்லது தேர்தல்களில் வெற்றி பெறக்கூடிய சூழலிலோ இல்லை. அதற்கு இன்னொரு காரணம், அக்கட்சியில் மக்களைக் கவரக்கூடிய தலைமைத்துவம் இல்லாதிருப்பது. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் காலாவதியாகிப்போன ஒன்று. சஜித் பிரேமதாசவினாலும் கட்சியை ஒற்றுமைப்படுத்தும், மக்களைக் கவரும் ஆற்றல் இல்லை என்பது நிரூபணமாகிவிட்டது. எனவே, ஐ.தே.க. என்பது எதிர்காலத்தில் தற்போதைய அரசாங்கத்துக்கு ஒரு சவாலாக இருக்கப் போவதில்லை.

மறுபக்கத்தில், தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும் உள் முரண்பாடுகளாலும், மக்கள் செல்வாக்கு இழந்தும் காணப்படுகின்றது. கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் அக்கட்சிக்கு ஏற்பட்ட சரிவு அதற்கு ஒரு உதாரணம். அதன் பின்னர் கூட்டமைப்பு மேலும் மேலும் மக்கள் செல்வாக்கை இழந்தும், உள் முரண்பாடுகளால் பலவீனப்பட்டும் உள்ளது. கூட்டமைப்பின் வருங்காலத் தரைவர் எனக் கருதப்படும் எம்.ஏ.சுமந்திரன் தமிழரசுக் கட்சியினதும், கூட்டமைப்பினதும் கொள்கைகளிலும் வியூகங்களிலும் மாற்றங்கள் செய்ய விரும்புவதால், கூட்டமைப்புக்குள் மேலும் குழப்பங்கள் உருவாகி, அது அடுத்த பொதுத் தேர்தலில் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய நிலை தோன்றியுள்ளது. கூட்டமைப்பு வழமையாகக் கையாளும் தமிழ் இனவாத உசுப்பேத்தல்களோ, 'துரோகி' வசைபாடல்களோ இனிமேலும் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடும் சூழல் இல்லை.

முஸ்லீம் மக்களின் அரசியல் தலைமைத்துவங்களும் பிளவுபட்டும், மக்கள் செல்வாக்கு இழந்தும் பலவீனப்பட்டே காணப்படுகின்றன. அத்தலைமைகள் வழமையாகக் கையாளும் ஆட்சியிலிருப்பவர்களை மிரட்டி அணிபணிய வைத்து தமது இலக்குகளை அடையும் தந்திரோபாயம் தற்போதைய அரசாங்கத்திடம் எடுபடாது என்பதால் அவை ஒரு கையறு நிலையிலேயே இருக்கின்றன. அத்தலைமைகள் இனிமேலும் ஐ.தே.கவில் நம்பிக்கை வைக்கும் சூழல் இல்லாததால், ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தலைமையில் அமையப்போகும் அரசாங்கத்துடன் எப்படி ஒட்டி உறவாடலாம் என்பதிலேயே மண்டையைப் பிசைந்து வருகின்றன.

இத்தகைய ஒரு அரசியல் சூழலில் மிகவும் அவதானமாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டிய நிலைமையில் சிறுபான்மை இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகள் இருக்கின்றன. ஏனெனில் விரும்பியோ விரும்பாமலோ, சிறீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கங்களே அடுத்த பல வருடங்களுக்கு ஆட்சியில் இருக்கப்போகின்றன. அந்த அரசில்தான் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிக் கட்சிகள், சில தேசபக்த – ஜனநாயகக் கட்சிகள், மலையகத்தின் பிரதான அரசியல் கட்சி, வடக்கிலும் கிழக்கிலும் இரண்டாவது நிலையிலுள்ள கட்சிகள் என்பன இருக்கப் போகின்றன.

இந்த நிலைமையில் பாரம்பரியமாக ஐ.தே.கவை ஆதரித்து வந்த தமிழ் – முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகள் தற்போதைய அரசாங்கத்தைப் பகைத்துக் கொண்டு எதையும் செய்தால் அது விவேகமானதாக இருக்காது என்பதுடன், தற்கொலைப் பாதையாகவும் இருக்கும்.

எனவே, அடுத்த பொதுத் தேர்தலில் நாட்டின் யதார்தத நிலையை உணர்ந்து செயல்பட வேண்டியது சிறுபான்மையின மக்களினதும், அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளினதும் முடிவாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் பழைய பாணியிலேயே தொடர்ந்து தவறு செய்தால் அதற்கு மக்களும் அனுமதிக்கமாட்டார்கள், வரலாறும் அனுமதிக்காது.

---

**12ம் பக்கத்தொடர்ச்சி...**


ஈடுபடாவிட்டாலும், இந்தமாதிரியான புலிகளின் பாசிசச்செயற்பாடுகளுடன் ஒருபோதும் உடன்பட்டவர் கிடையாது. இதனால் இவர் 1990ஆம் ஆண்டு புலிகளால் கடத்தப்பட்டு, பல மாதங்கள் புலிகளின் சித்திரவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர். புலிகள் இவரை விடுவித்தபோதும், தொடர்ச்சியாக இவரது ஒவ்வொரு செயற்பாடுகளும் புலிகளால் கண்காணிக்கப்பட்டன. எனினும் உள்நாட்டு யுத்தத்திற்கும் புலிகளின் அடக்குமுறைக்கும் முகங்கொடுத்தவாறு தனது பணியினைத் தொடர்ந்தார்.

சமூக சேவையாளர் வீரகத்தி சேந்தனுக்கு அஞ்சலி செலுத்துவதில் **வானவில்** ஊடகமும் இணைந்து கொள்கின்றது.

# பெருந்தொற்றுக்குப் பிறகான உலகம் எப்படி இருக்கும்?

நம் உலகத்தில் புதிய தாராளவாதச் சூழலில் அதீதமாக்கப்பட்ட ஏற்றத்தாழ்வை இந்த கொரோனா பெருந்தொற்று கூர்மையாக அம்பலப்படுத்தியுள்ளது. குறிப்பாக, அமெரிக்காவில். அமெரிக்க நாட்டின் இனவாதக் குணத்தையும் வெளிக்கொணர்ந்துள்ளது. புதிய தாராளவாதக் கொள்கை நடைமுறைப் படுத்தப்பட்டு 40 வருடங்களுக்குப் பிறகான ஒட்டுமொத்த புள்ளிவிவரங்களைப் பார்த்தால், நாட்டின் ஒட்டுமொத்த வளத்தில் 20% வளத்தை 0.1 பங்கு ஜனத்தொகையினர் சேர்த்துள்ளனர். ஜனத்தொகையில் பாதிப் பேர், மைனஸ் மதிப்பில் உள்ளனர். 70% மக்கள், அரசின் நிதி உதவியை நம்பி வாழும் நிலை உள்ளது. பெரும்பாலான மக்கள், அன்றன்று வேலைக்கு எஜமானர் அழைப்பதை எதிர்பார்த்து வாழும் அபாயகரமான சூழலில் உள்ளனர். கறுப்பின மக்களின் நிலை இதைவிட மோசமானது. 400 ஆண்டு காலமாக நிலவும் கொடுமையின் எச்சங்கள் வெட்டவெளிச்சமாகியுள்ளது.

அமெரிக்க அதிபரைப் பொறுத்தவரை அவர் அரங்கேற்றும் தீமைகளுக்கு எல்லைகளே இல்லை. அவர் மிக அமைதியாக, சூழ்நிலைகளை மேலும் மோசமாக்கும் வேலைகளில் ஈடுபட்டுள்ளார். கொரோனா பெருந்தொற்றுச் சூழலின் பின்னணியை எடுத்துக்கொள்வோம். இதன் நடுவிலேயே சுற்றுச்சூழலுக்கு மாசு விளைவிக்கும் ஆலைகள் தொடர்பிலான விதிமுறைகளை ஒவ்வொன்றாகத் தளர்த்தி வருகிறார். சுவாச மண்டலம் தொடர்பிலான பிரச்சினைகளை ஏற்படுத்தும் கொரோனா பெருந்தொற்று ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில், வளிமண்டலத்தை மேலும் மாசுபடுத்தினால் என்ன ஆகும்? நீங்கள் மக்களைக் கொலை செய்கிறீர்கள். மாசுபடுத்தும் ஆலைகளுக்கு அருகில் வாழும் மக்களை நீங்கள் கொலை செய்கிறீர்கள். அவர்கள் அந்த இடத்துக்கு அப்பால் தொலைவில் வாழ்வதற்கான வசதி இல்லாதவர்கள். அவர்கள் எல்லாம் கறுப்பின மக்களும் ஸ்பானிய மக்களும்.



நோம் சோம்ஸ்கி

ஜோர்ச் ப்ளாய்டின் கொலை ஒருபுறம் என்றால், சூழல் மாசுபாட்டால் கொல்லப்படும் மக்கள் இன்னொரு புறம். இறைச்சியை பேக்கிங் செய்து அனுப்பும் தொழிலகங்களுக்குத் திரும்பத் தொழிலாளர்களை வேலைக்குப் போக அதிபர் உத்தரவிட்டதும் அதைப் போன்றதுதான். ஏனெனில், பணக்கார அமெரிக்கர்களுக்கு நேர்த்தியாக வெட்டிய இறைச்சிகள் சாப்பிடத் தேவை. அந்தத் தொழிலாளர்கள் யார்? கறுப்பர்கள், ஸ்பானியர்கள். அவர்கள் மிகச் சங்கடமான சூழல்களில் பணியாற்றுபவர்கள். புதிய தாராளவாதச் சூழலில் காணாமல்போகத் தொடங்கிய தொழிலாளர்கள் உரிமைகள் இப்போது கிட்டத்தட்ட மறைந்தேவிட்டன.

எல்லையில் மெக்சிகோவில் உள்ள தொழிற்சாலைகளில்தான் அமெரிக்க கார்களுக்கான தோல் இருக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. அங்குள்ள நிலைமைகள் மோசமாக உள்ளதென்று அரசு எச்சரித்தும் ட்ரம்ப் அவர்களை வேலைக்குப் போகக் கட்டாயப்படுத்துகிறார். குடியரசுக் கட்சியினர் சட்டத் திருத்தம் வழியாக, தொழிலாளர்களைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் கட்டாயப்படுத்தி பணிக்கு வரச் செய்வதற்கான வழிமுறைகளை முயன்றுவருகின்றனர். இதனால் பாதிக்கப்படப் போவதும்கூட கறுப்பர்களும் ஸ்பானியர்களும்தான். இவையெல்லாம் பொதுமக்களின் பார்வைக்கு முன்னர் அப்பட்டமாக நடக்கிறது.

அமெரிக்க அரசு அறிவித்திருக்கும் ஊக்கநிதித் திட்டத்தால் சிலர் பயனடைகின்றனர் என்பது உண்மையே. ஆனால், பணம் அன்றாடக் கூலியை நம்பியிருக்கும் மக்களின் சட்டைப்பைகளுக்கு நேரடியாகச் செல்லவில்லை. ஊக்கத்தொகையில் பெரும்பகுதி வங்கிகளுக்குச் செல்கிறது. வங்கிகளே அவற்றை நிர்வகிக்கின்றன. அந்தப் பணம் செல்லும் வழிகளைக் கண்காணிப்பதற்கு நேர்மையான மேற்பார்வையாளர் தேவை. அமெரிக்கா போன்ற ஆழமாக ஊழல் வேரோடிய சமூகத்தில் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம். ஏற்கெனவே மோசமான ஊழலில் இருந்த சமூகம் இது. இப்போது ட்ரம்பின் தாக்குதல் சமூகத்தை மேலும் சேதாரப்படுத்தி உலகின் கேலிப்பொருளாக அமெரிக்காவை மாற்றியுள்ளது.

உலக சுகாதார அமைப்பை ட்ரம்ப் கொலை செய்வதற்குத்தானே முயன்றார்? உலக சுகாதார அமைப்பிலிருந்து தன் நாட்டை விலக்கிக்கொண்டு, நிதி அளிப்பதையும் நிறுத்தினார். அந்த அமைப்பு செயல்படும் நிதியில் 40% பங்கு அமெரிக்கா அளிப்பது. கொரோனா வைரஸ் போன்ற பெருந்தொற்றுக் காலங்களில் ஏழை நாடுகளின் மக்கள் உயிரைக் காக்கும் அமைப்பு அது. உலக சுகாதார அமைப்பு தொடர்ந்து செயல்படாமல் தடுத்தால் அமெரிக்காவில் உள்ள சாதாரண மக்கள் பெரும் எண்ணிக்கையில் இறந்துபோவார்கள். அது அவரது தேர்தல் வெற்றிவாய்ப்பை அதிகரிக்கும். இது பற்றி யாராவது, ஏதாவது பேசினார்களா?

ஏற்கெனவே அதிகாரத்தில் இருந்த, புதிய தாராளவாதப் பேரழிவை உருவாக்கிய, ட்ரம்பின் தீங்கான கொள்கைகளால் அபிவிருத்தியடைந்த சக்திகள் அனைத்தும் ஒரு விஷயத்துக்காக ஓய்வில்லாமல்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...